





# THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்.

நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரூ 3-8-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

நாடார்குல மித்திரன்
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

பத்திராதிபர், சு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

மலர் 4 ] ருத்ரோத்காரி வரு வைகாசிமீ 8உ திங்கட்கிழமை (அருப்புக்கோட்டை) 1923வரு மேமீ 21உ [ இதழ் 27



இனாம்! இனாம்!!

## பெருங்காயம் செய்யும் முறை.

எமது மல்லிகா ஆயில் என்னும் சிறந்த கூந்தல் தைலம் 3 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு பெருங்காயம் செய்யும் முறை இனாமாய் அனுப்பப்படும். இம்முறையைக்கொண்டு ஒவ்வொருவரும் சக்திக்கேற்றபடி பெருங்காயம்செய்து, விற்பனை செய்வதால் சுகஜீவனம் செய்யலாம். மல்லிகா ஆயில் 3 பாட்டல் விலை ரூ 2. தபால் செலவும் இனாம்.

K. N. S. & Co ARIMALAM.

## சென்னையில்.

## நாடார் போஜனசாலை.

பர்மா, பினாங்கு, சிங்கப்பூர் போகிற ஜனங்கள் தங்கிப் போவதற்குத் தகுந்த சௌகரியமுண்டு.

S. பழனியப்ப நாடார்,
மலையப்பெருமாள் வீதி நெ 59 வீடு.
மதராஸ்.



## புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பிகிளப்முதலியவைகள் தக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லக்கேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் கீழூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F S பெரையா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் விருதுபட்டி. { எஸ். எஸ். கருப்பையா நாடார். எஸ் ராமசாமி நாடார்

...தர் உண்மையான ஔஷதம்.

## மதனகாமேசுவர தாதுபுஷ்டி லேகியம்.

இவ்வுத்தம ஔஷதமானது சில அபூர்வமான மூலிகைகளின் சத்துக்களாலும், அநேக விலையுயர்ந்த வஸ்துக்களாலும். சுயமான தங்க பஸ்பமும் கலந்து முடிக்கப்பட்டது. நீண்டகாலமாய் உபயோகித்து அநுபவத்தில் புகழ்சிறந்து விளங்குவது. குணஞ் செய்வதிலிருந்தும் ஒருக்காலும் தவறுவது. இதனை டைரக்ஷனில் சொல்லியபடி உட்கொண்டு வருவதினால் அக்கினிமாந்திய ரோகம் நீடித்த மலபந்தம் பித்தாதிக்க ரோகம், அஜீர்ணரோகம், வாதப்பிடிப்புரோகம், தலைவலி, சரீரம் இளைத்து துர்பலமாயிருத்தல், இந்திரியம் நீர்த்துவிழுதல், வெள்ளை, வெட்டை, தந்திமேகம் இதன் வகுப்பில் சேர்ந்த 12 வகையும் க்ஷயம், காசம், குன்மம், பாண்டு, சோகை; நீரழிவு முதலிய கொடியரோகங்களை நிவர்த்திப்பதில் வல்லமையுள்ளது. இது கெட்ட இரத்தத்தை சுத்தித்து சுத்தஇரத்தத்தையும் இந்திரிய விர்த்தியும் அக்கினி விர்த்தியும்உண்டாக்குவதுடன்சரீரம்பீமனைப்போன்ற வலுவும் உண்டாக்கி மலஜல விஸர்ஜனத்தையும் ஒழுங்குபடுத்தி சரீரமும் திடகாத்ராரோக்கியமாக இருக்கும்.

இந்த அதிர்ஷ்டகாலத்தை வீணுக்க வேண்டாம். ஒரு முறை வாங்கிஉபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். 24-நாள்சாப்பிடும் மருந்தடப்பி 1-க்கு விலை ரூபாய் 3—0—0. தபாற் சார்ச்சு இனாம்.

N. G. ராஜா அண்டு கம்பெனி,
மருந்து ஷாப் நெ 182.
பெரியகடை; திருச்சி

## ஹரிதாசர் மருந்துகள்.

## மிகவும் கைகண்டது.

காலரா மருந்து:—கொடுத்தவர் எல்லாரும் பிழைத்துக் கொண்டார்கள் ரூ 1—4—0

வாய்வு மாத்திரை.—50-க்கு ரூபாய் 1-0-0 சகல வாய்வுகளையும் கண்டிக்கும்

என்றுந்தைலம்:—ரூ 1—4—0 இதை ஸ்நானம் செய்தால் சகல கண்வியாதிகளும் மேகசூடும் நீங்கும்.

நீர்யூரல் தைலம்:—ரூ 1—4—0 இதை ஸ்நானம் செய்துவர சகல பித்தம், தலைநோய் பீநிசம் நீங்கும்.

ஹரிதாசர்பாந்த மாத்திரை.—50-மாத்திரை அணா 12 இதை உபயோகித்தால் சகலவித குழந்தை நோய்கள் தீரும். கைகண்டது. மற்ற வியாதிகளுக்கு எழுதி விபரம் அறியலாம். தீராத நோய்கள் நமது மருந்தில் தீரும் நிச்சயம்.

வைத்தியர் H. தேவதாஸ்
B. A. L. T. A. T. T. U.M.P.
தாசா வைத்தியசாலை,
திண்னனூர்,
M. S. M. R.

தபால் பெட்டி 555. தந்தி விலாசம். "மூக்குத்தாள்"

உலகெங்கும் புகழ்பெற்ற

# பட்டணம் பொடி

காரம், நிறம், வாடை, குணம், மணம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப் பெற்று தினசரி நூற்றுக்கணக்கான பார்சல்கள் அனுப்பப்பட்டு தங்கமெடல் வெள்ளி மெடல் பரிசுபெற்று தினசரி நற்சாக்ஷிகள் குவிகின்றன.

என். வி. ஷண்முகம் கம்பெனியார்,
பட்டணம் பொடி தொழிற்சாலை,
மதராஸ்.

## ஸ்ரீகிருஷ்ணலீலை

(வீரமாமுனி எழுதுகிறார்.)

முன் தொடர்ச்சி.

ஸ்ரீபகவானுடைய ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் சிருஷ்டித்த ஸ்திதி, சம்மாராதிசயங்களுக்கு காரணமாயிருக்கின்றன. சேதனசேதன பிரபஞ்சங்களும் ஹரியினுடைய ரஜோகுணம்சத்தத்திலிருந்து ஜனித்த இச்சாசெக்தியைவகித்து ஸ்திரீபுருஷ சம்யோகத்தைச் செய்ய அதனால் இந்தப் பிரபஞ்சத்தவர்களுடைய சந்ததிகள் விளங்குகின்றன. இவர்கள் புண்ணிய பாவங்களுக்கு அனுகுணமாக அந்தப் பகவானுடைய ஜலஸத்வ தத்வங்களுக்கு ஜனித்த மேக சமுகங்கள் ஜர்வேசாக்ஞையை வகித்து ரவிசந்திர அங்காரக பார்க்கவாதி கிரகபேதங்களாலும் யக்ஞயாதிதேவதா நியமங்களினாலும் சமுத்திரவன பர்வதங்கள் முதலிய சர்வ பிரதேசங்களிலும் தகுந்தபடி வருஷித்தது இவ்வுலகத்தைஜல சமர்த்தியடையச்செய்து, சர்வபிராணிகளுக்கும் ஜீவாதாரமாகிய பல தருண ஸஸ்யாதி நானாவித ருசிவர்க்கங்களை விருத்தியடையச்செய்து அவர்கள் மனோபீஷ்ட சித்திகளை அனுபவிக்கும்படி அவரவர்களுக்கு இஷ்டங்களைக் கொடுக்கின்றன. ஆகையால் உலகத்தவர்களுக்கு விஷ்வபுருஷனுடைய ஏகாங்க நிர்மித தத்வாதிதேவதையான இந்த இந்திரபகவானால் ஆகவேண்டிய சம்பூரண கர்ம பலனென்னவிருக்கின்றது. ஒன்றுமில்லை. அதனால், நமது யோகக்ஷேமங்களைக் குறித்து இந்த இந்திர பகவானை யபேட்சித்து நாம் அர்ச்சிக்கவேண்டிய அவசியமில்லை. நாம் ராஜ்யாதிகாரங்களும் தேசங்களும் பட்டணங்களும் நகரவாசங்களுமாகிய யாதொரு நிலையுமில்லாமல் யதேச்சாவிகாரிகளாய் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றோம். நாம் எப்போதும் வனங்களிலும் பர்வத சாற்புகளிலும் நதிதீரங்களிலும் நித்யவாசஞ்செய்து இப்படிப்பட்ட வனப்பிரதேசங்களில் கோவினங்களை சமரட்சணஞ்செய்து நினைத்த விடங்களில் ஆயர்பாடியை நியமித்துக்கொண்டு ஜீவனஞ்செய்கின்றோம். ஆதலின் முக்யமாய் பசுக்களையும் பசுக்களின் ஆதி தேவதைகளையும் பர்வதங்களையும் அதன் ஆதிதேவதைகளையும் நதிகளையும் அதன் தேவதைகளையும் நாம் பூசிக்கவேண்டியது கிரமமாகும்.

பிதாவே! இப்போது நீங்கள்யாவரும் இந்த இந்திர யாகத்துக்குச் சம்பாதித்த திரவியங்களைக்கொண்டு கோப்பிராமண வனநதி பர்வதங்களை பூசைசெய்யுங்கள். அந்தப்பூஜை செய்கிற விபரத்தை சொல்கிறேன் கேளுங்கள். நாமெல்லோரும் பரிசுத்தர்களாய்ப்பயபக்தியுடன் ஸ்ரீஹரியைத் தியானஞ்செய்துகொண்டு நானாவிதமான ருசிரான்னங்களையும் அவரைதுவரை பயறு காராமணி முதலிய பருப்புகளையும் அறுவகை ருசிபாகங்களோடுகூடிய பொரியல் துவையல் கூட்டுக்கறி குழம்பச்சடி யென்றும் ஐவகையாகிய பலவித கறியமுதுவர்க்கங்களையும் நானாவிசித்திர மதுரார்க்க ருசிவர்க்க பலகாரத்திரளுகளையும் கந்தமூலபலாதி ருசிவர்க்கங்களையும் பானியங்களுக்கு யோக்கியமாக பஞ்சதாரையுடன் பாலமுதோடு பாகமாக்கப்பட்ட பாயசங்களையும் சந்தனகுங்கும தாம்பூலாதி திவ்யபரிமள திரவியங்களையும் நானாவித சுகந்த புஷ்ப விசித்திரமாலைகளையுஞ் சம்பாதித்துவைத்துக்கொண்டு நந்தகோகுலத்திலுள்ள பசுக் கூட்டங்களிடத்திலிருந்து சுரந்த பாலமுதுகளையும் தயிர் வெண்ணெய் நெய் முதலிய மங்கல திரவியங்களையும் கொண்டு ஹோமங்கள்செய்து விப்ரர்களுக்குத் தானங்கள் கொடுத்து இதர ஜனங்களுக்கு அன்னமளித்து பசுக்கூட்டங்களுக்கு யதேஷ்டமாக புல் முதலியவைகளைக்கொடுத்து திருப்தியடையச் செய்து நாய்முதலிய மிருகங்களுக்குந் தகுந்த ஆகாரங்களைக் கொடுத்து கோவர்த்தனகிரி பர்வத ஆதிதேவதைகளைக் குறித்து பூசித்தபிறகு நமது பந்துஜனங்களில் யாவரும் நம்மைச்சார்ந்த மற்றவர்களும் அலங்காரமாக திவ்ய வெண்பட்டு வஸ்திரங்களைத் தரித்து திவ்யாபரண பூஷிதர்களாய் திவ்யசுகந்த பாகபோஜனங்களைச் செய்து பசுக்களை பிரதட்சணஞ்செய்து மிகவும் பக்தியுடன் நமஸ்கரம் பண்ணி திருப்தியடைவோமாக. (இப்போது, சங்கராந்திப் பண்டிகை மாட்டுப் பொங்கலென்பது இவைதான்.)

ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருவாக்குக்கு மறுவாக்குரைக்காமல் சகல சாமான்களும் தயார்செய்து பகவான் நிருமாணித்த பர்வதாகார சொரூபத்திற்கும் மற்ற பர்வதங்களுக்கும் பூஜைகள் நடத்தி கிருஷ்ணனிட்டகட்டளைப்படி சகலமும் முடித்து சம்பூரணமாய் தானங்கள் செய்து தாங்களுமுண்டு பசுக்களைப் பசியாற்றி புதுவஸ்திரங்கள் கட்டி சந்தன தாம்பூலமருந்தி சுகந்த பரிமள மாலைகள் சூட்டி ஆடிப்பாடிகளித்து ஆயர்பாடிகள் போயமர்ந்து சுகித்திருந்தனர்.

கிருஷ்ணபரமாத்மா சிறுபிராயத்திலிருந்து தம்முடைய ஆன்மவலுவால் உலகத்தில் பிரஜைகளுக்கேற்பட்ட துன்பங்களைவிலக்கியும் ஞானத்தை விளக்கியும் புதிய நாகரீகவழிகளைக் காட்டியும் அநாகரீகப்பேய்களை ஓட்டியும் இகபர சாதகங்களை ஆண் பெண்ணிருபாலரும் அடையும் பெரும் வேதாந்த ரகஸ்யங்களை துலக்கியும் காட்டவல்ல சாந்தமூர்த்தியாய் விளங்கி வந்திருக்கின்றாரென்பது விளங்குகிறதன்றோ. (இன்னும்வரும்)

## விபசாரம்

### இதனால்நேரும்கேடு.

உலகத்தில் மானிட ஜென்ம மெடுப்பது அரிதரிது. அதிலும் கூன், குருடு, சப்பாணி ஊமை, செவிடு முதலியவைகளில்லாமற்பிறப்பதரிதினும் அரிது. அப்படி அருப்பாடுபட்டெடுத்த ஜென்மாவை அநியாயமாய் மீளாநரகத்திற்கு இரையாக்கி வருகிறார்கள்.

உலகத்தில்மானிடஜென்மமெடுத்த ஒவ்வொருவனும் இகபர சாதனத்திற்கேதுவாகத் தனது குலத்திலுதித்த ஓர் கன்னிகையை மேதகசாக்ஷியாக தேவசாக்ஷியாக மணம் புரிந்து அவளிடத்தில் இஷ்டசுகானுபவங்களை யனுபவித்து இல்லற தருமங்களை தவறுமல் நடத்தி வாழையடி வாழையைப்போல தனது வம்சாபிவிருத்திக்குறிய புத்திர பாக்கியங்களை பெற்றுத் தனது அந்திய காலத்திற் புத்து என்னும் நரகத்திற் காளாகாமல் அப்புத்திரர்களால் ஈமக்கடன்கள் முதலானசடங்குகளைப் பெற்று மோக்ஷவீட்டையடைய வேண்டுவது முக்கியமானகடமையாகும். தற்காலம் விவாகமில்லாத சில வாலிபர்களும் தாரமிழந்த சிலரும் தங்கள் வாளுளை வீணாக்கி பரமாதர்களை ஆசை நாயகியாக வைத்துக்கொண்டு அவர்களுடன் கூடிக்குலாவி சுகானுபவங்களை யனுபவித்து உல்லாசமாய் வெளிக்கிளம்பி காலங்கழித்து வருகிறார்கள். அப்படிச் செய்வது கூடாதகாரியமாயினும் தங்களுக்கேற்பட்ட சௌகரிய குறைவைநிவர்த்தித்துக்கொள்ள வேண்டியதை உத்தேசித்தே. இவ்வித கெட்ட காரியத்திற் பிரவேசிப்பது வழக்கமாயிருந்துகொண்டே வருகிறது. என்ன சௌகரிய குறைவுகள் ஏற்பட்டாலும்புத்திமான்கள், வீரபுருஷர்கள், ஆண்மைத்தன முடையவர்கள், வைராக்கிய முள்ளவர்கள் அவ்விதக் கொடிய பாவமுள்ள கெட்ட காரியங்களில் பிரவேசிக்க ஒருபோதும் துணியவேமாட்டார்கள். தங்கள் கூரிய அறிவினால் நிவர்த்திசெய்து கொள்வார்கள். ஏனென்றால் 'பரதாரதிராதிகமனம்' செய்வது பாதகங்களில் முதன்மை என்பதே காரணமாகும். ஸ்ரீராமர் ராவணனை சங்கரிக்க இலங்கைக்குச் சென்றிருந்த சமயத்தில் ராவணனுடைய சிவபூஜைகளையும் தெய்வப் பிரார்த்தனைகளையும் காலந்தவறாது அவன் செய்துவந்த அனுஷ்டானங்களைப் பார்த்து, இவ்வளவு நேமமாயிருக்கப்பட்ட ராவணனை எவ்விதம் யுத்தத்தில் ஜெயிக்கப்போகிறோம் என்று இலட்சுமணர் கேட்டகாலத்தில் எவ்வளவு தபோபலமுடை யவனாக இருந்தாலும் எவ்வளவு தருமங்களைச்செய்தவனாக இருந்தாலும் பரஸ்திரீகமனம்செய்தால் அத்துடன் அவன் செய்த சமஸ்த புண்ணியங்களும் போய்விடுகிறது என்னும் ஆகலால் இந்த ராவணனை ஜெயிப்பது பிரமாதமல்லவென்று ஸ்ரீராமர் பதிலுரைத்தார்.

அது ஒருபுறமிருக்க விவாகஞ்செய்துகொண்ட சில ஆசாமிகள் தங்களை தெய்வசாக்ஷியாக மணந்து கணவனே தெய்வம் என்றும் அவனை விட்டால் வேறு கதி இல்லை என்றும் நம்பி அல்லும் பகலும் பர்த்தாவின்மீது பக்தியோடுபணிகள்செய்துகொண்டிருக்கிற உத்தமிகளாகிய தங்கள் மனைவிகள் ரூபமாகவும் லக்ஷணமாகவுமில்லையென்று எதிர் ஜாமீன் பணம் பேசியபடி இன்னும் வரவில்லை. சீர் சரியாக சொன்னபடி செய்யவில்லை யென்றும் அநேக முகாந்தரங்களையும் வீண் சால்ஜாப்புகளையும் சொல்லி தங்களுக்குரிய இடம்பொருள் ஏவல் என்ற திரியுபபலச் செருக்கைக்கொண்டும், விவாகம் புரிந்த சொந்த மனைவிகளிடத்தில் துவேஷங்காட்டி அம்மனைவிகளைப்பார்க்கக்கூட சகிக்காமல் 'தன்மனையாளை தனிமனையிருத்திப் பிறர் மனைக்கேகும் பேதையும் பதரே' என்ற நீதிவாக்கியப் பிரகாரம் தங்களறிவீனத்தாலும் மேனாட்டு நாகரீகத்தாலும் உயர்தரமான ஒயின் பிராந்தி முதலிய பானங்களினாலும், தன் மதிமங்கி பார்ப்பவர்கள்பரிகாசிக்கும்படி அன்னிய மாதர்களை தங்கள் நாயகிகளுக்கு மிஞ்சிய ரூபவதிகளாயிருப்பினும் இல்லாவிடினும் தான் மெச்சியதே ரம்பை என்ற பழமொழிப் பிரகாரம் அவர்கள் மனதிற்கேற்ற பரமாதர்களை வைத்துக் கொண்டு இரதி மன்மதனைப்போல் மனதிலெண்ணிக்கூடிக்குலாவி குதுகலமாய் இன்ப சுகானுபவங்களை யனுபவித்துக் கொண்டும் சிலர்கள் சோரநாயகிகளிடத்தில் போஜனங்களை நடத்திக்கொண்டும் இம்மை மருமைக் கொவ்வாமல் அவ்வைப்பாட்டி வயிற்றிலுதிக்கும் புத்திரர்களைத் தங்கள்குலக்கொழுந்தாய்மதித்து அவர்களைக்காப்பாற்றுவதிலேயேகண்ணும் கருத்துமாயிருந்து கொண்டும் சுற்றத்தார்கள் ஏசவும், பந்துக்கள் பகைக்கவும், மனைவிகள் ஏக்கமுறவும், அந்நியர்கள் கைகொட்டி [illegible] கொள்ளுகிறார்களே அந்தோ! பரிதாபம்!! இவ்விணர்களை மணந்த மனைவிகள் என்ன செய்வார்கள. உத்தம குண மனைவிகளா யிருந்தால் ஏதோ தாங்கள் பூர்வஜென்மத்தில் செய்த தவக்குறையினால் இந்த ஜென்மத்தில் பிரமன் தலையில் இவ்விதம் எழுதிவிட்டான் என்று துக்கித்து துக்கஸாகரத்தில் ஆழ்ந்து ஒருவாறு தங்கள்மனதை சமாதானப்படுத்திக்கொண்டு கண்ணை இமை காப்பதுபோல தங்கள் கற்பை காப்பாற்றிக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருவார்கள். மத்திம குணத்தை யுடைய மனைவிகளா யிருந்தால் தங்கள் கணவன் செய்துவரும் அடாதகாரியத்தை பலரறிய வெளிப்படுத்தி வெட்கத்தைகெடுத்து வைப்பார்கள். ஆனால் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவார்கள். அதம குணமுடைய மனைவிகளா யிருந்தால் தங்கள் பர்த்தா அன்னியமாதர்களைக்கூடிச் சுகிக்கும் அக்கிரமங்களுக்குப் பதிலாக தாங்களும் சோரநாயகர்களை வைத்துக் கொண்டு சுகிப்பார்கள். சில அதம ஸ்திரீகள் கணவனை மதியாமல் கணவனுக்கெதிரிலேயே சோரநாயகனுடன் வெகு குதூகலமா யிருப்பது முண்டு. அவன் காணாமல் ஓடிஒளிவதுண்டு. ஊரார் சிரிப்பதுண்டு. அவள் பெற்றோரும் உற்றோரும் ஊர்முழுவதும் அலைவதுண்டு, அன்னியர் மனையில் அநேக நாளிருப்பதுண்டு. வெட்கம் கெட்டு வெளிவருவதுண்டு சிலதுரோகிகள் கள்ளக் கணவனுடன் சேர்ந்து கொண்ட கணவனை கொல்வதுண்டு. ஜமீனிருந்தால் அதையும்கள்ளக்கணவனிடம் சேர்க்கப் பார்ப்பதுண்டு. கணவனை கட்டி வைத்து அடிக்கப்பார்ப்பதுண்டு. இன்னும்பலவுண்டு கச்சேரிக்குச் சென்று வருவதுமுண்டு தனக்குச் சமானம் எவருமில்லை என்று எண்ணிக் கொள்வதுண்டு. நற்குலத்திற் பிறந்து கணவனே கெதியென்று அவன் தயவை எதிர்பார்க்கக் கடமைப்பட்டமனையாட்டிகள் இப்படிச் சோரத்தனம் செய்யத்தலைப்படுவதற்குக் காரணம் யார்தெரியுமா? கணவன்மார்களையன்றி வேறன்று. புருஷர்கள் பெண்ஜாதிகளைக் கிரமப்படி வைத்து அடக்கி யாண்டு வாழ்ந்து வந்தால் அவர்கள் சோரத்தனம் செய்யத்தலைப்படுவார்களா? ஒருக்காலும் தலைப்படமாட்டார்கள், ஒருவேளை அறிவில்லாப்பெண்களாயிருந்தால் அவ்வித துர்செய்கைகளுக்கு எண்ணம் கொள்வதுண்டு. அப்படிக் கொள்ளினும் தங்கள் கணவனுக்குத் தெரிந்து விட்டால் கண்டிப்பு தண்டனை கிடைக்கும் என்ற பயத்தால் அவ்விதஞர் குணமானது ஒருவாறுமாறி நற்குணமே நாடச்செய்யும். அங்ஙனமிருக்க "எருமைச்சாணம் ஓமத்துக்கு உதவாது"என்ற பழமொழிப்படி ஜாதிக்கும், ஜனத்திற்கும், நீதிக்கும் ஏற்காத வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டு மனைவிகளைப் புறக்கணிக்கும் மாந்தர்களின் புத்திசாலித்தனத்தை என்னென்று சொல்வது?

ஆஹா! கணவனிறந்த காலத்தில் கட்டிய பெண்சாதி தாலியறுப்பாளா? வைப்பாட்டி தாலியறுப்பாளா? தன் பெண்சாதிக்கு மனையாட்டி என்றும், வாழ்க்கைத்துணைவி என்றும், காதலி என்றும், பெயர் வந்ததற்கு காரண மென்ன? மனையாட்டி என்பது வீட்டுக்குத் தலைவி என்றும், வாழ்க்கைத்துணை என்பது ஒருவனுடைய குடும்பவாழ்க்கைக்கு துணையாயிருப்பவளென்றும், காதலி என்பது கணவனுடையஆசைக்குகந்தவளென்றும் பொருள்படுகிறதன்றோ! இத்தியாதிகாரியங்களை உத்தேசிக்காமல் மானங்குலைந்து மரியாதை கெட்டுப் போவதற்குக் காரணமான வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டு இல்லறவாழ்க்கைக்கு ஏதுவான நாயகிகளின் நட்பை மறந்து அவர்களை பரபுருஷ கமனஞ் செய்யும் பாதையில் விடுத்து உலகத்திற்குப் பெரும்பழிப்புக்கு இடம்தேடிக் கொள்ளும் நண்பர்கள் வைப்பாட்டிகளென்னும் மாயக்கள்ளிகளின் நேசத்தை விடுத்து இகபரசாதகத்திற்கேதுவான அருமை மனைவிகளின் நேசத்தை யடுத்து அவர்களுக்கு இன்பசுகானுபவங்களைக் கொடுத்து புத்திரப்பேறெடுத்து நாட்டுக்கு நல்லவர்களெனப் புகழ்படைத்து சுகஜீவிகளாய் வாழ்ந்து நற்கதிக் காளாவார்களாக.

கா. ரா. சுப்பிரமணியய்யர்,
காகை.

## திருச்செந்தூர் ரெயில்வே.

திருநெல்வேலி-திருச்செந்தூர் ரெயில்வே தொடரை குலசேகரன்பட்டணம் வரை நீட்டிவிட வேண்டுமென ஜில்லாப்போர்ட் பிரசிடெண்ட் ஸ்ரீமான் டி. என். சிவஞானம்பிள்ளை யவர்கள் சென்ற மாதச் சட்டசபையில தீர்மானம் கொண்டுவந்ததற்கிணங்கி கவர்ன்மெண்ட் அனுமதி கிடைத்துவிட்டபடியால் பாதை எந்த மார்க்கமாய் போடலாமென சென்றவாரத்தில் ஜில்லாப் போர்ட் மீட்டிங்கில் விவாதம் நடைபெற்றதில் திருச்செந்தூரிலிருந்து நேராகக் கடற்கரையோரமாக தொடரைத்திறக்கவேண்டுமென்று ஒருசாராரும், காயாமொழி, பரமன்குறிச்சிமுதலிய ஊர்களின் ஓரமாகப் போடவேண்டுமென மற்றொரு சாராரும் வாதித்திருக்கிறார்கள். பிந்தியமார்க்கமாகவே டி தொடரை திறக்கவேண்டுமென காயாமொழி; பரமன்குறிச்சி வட்டகை மகாஜனங்கள் ஏற்கனவே மகஜரனுப்பியிருப்பதாய்த் தெரிகிறது. டி மகஜரை ஆதாரமாய்க் கொண்டு திருநெல்வேலி பிரபல வகீலும் ஜில்லாப்போர்ட் அங்கத்தினருமான ஸ்ரீமான் ஸாதுகணபதி பந்துலுகாரு அவர்கள் "பரமன்குறிச்சி, காயாமொழி முதலிய கிராமத்தார் மகஜர் செய்து கொண்டபடி அந்தக் கிராமங்கள் வழியாகவே போடவேண்டுமென்றும் ரெயில் போடுவதில் முக்கியமாக ஜனங்களுடைய சௌகர்யங்களையே பிரதானமாய்க் கவனிக்கவேண்டுமென்றும்" வெகு உக்ரமாய்ப் போராடியும் சமுத்திரக்கரை நேர்பாதையிலேயே போடவேண்டுமென்று மெஜாரிட்டி தீர்மானம் நிறைவேறியிருப்பதாய் தெரிகிறது. கடற்கரை நேர்பாதையாக குலசேகரன்பட்டணத்திற்கு 7-உ மயில் தூரமென்றும் பாதைபோட ரூ 3½லட்சம் செல்லுமென்றும், பரமன்குறிச்சிமார்க்கமானல் 14 மையில் தூரமென்றும் செலவு ரூ 7½லட்சம் ஆகுமென்றும் உத்தேசத்திட்டம்போட்டிருப்பதாய்தெரிகிறது. அந்தஉத்தேசத்தின்படி நான்குலட்சம் ரூபாய்தான் அதிகச் செலவாகுமாயினும் வருமானமும் ஜனவசதியும் பூரண திருப்தியாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

பிரஸ்தாப தொடரை புதிதாக ஏற்படுத்துவதில் எவ்விதமும், குலசேகரன்பட்டணத்தை வெகு சீக்கிரத்தில் தொட்டுவிடவேண்டுமென்ற ஓர் அலக்ஷியத்துடன் தீர்மானித்தது விவேகமும் உசிதமான முறையாகமாட்டாது. பொதுஜனசௌகர்யத்தைப பிரதானமாகக் கருதுவதே ஜனப்பிரதிநிதிகளின் கொள்கையாயிருந்தாலொழிய தேசக்ஷேமத்தைக் கருவதாகப் பொதுஜனங்கள் நம்ப இடம் ஏற்படாது. பரமன்குறிச்சி, காயாமொழி, தண்டுபத்து, பதிக்கப்பத்து முதலிய பல பெரிய ஊர்களைக் கொண்ட அத்தென்பகுதியில் பிரயாணம் செய்பவர்கள் சதா பரமகஷ்டத்தை யனுபவிக்க நேரிடுகிறது. மணற்பாங்கான அப்பகுதிகளில் ரஸ்தாவசதியுமில்லாத நிலைமையில் கோடைகாலத்தில் வண்டிப்பிரயாணமும், கால்நடைப் பிரயாணமும் மிக நிர்ப்பந்தமாயிருக்கிறது, மேலும் அவ்வழியே குலசேகரன் பட்டணம் போய்ச் சேருகிற வரையில் அநேக ஊர்களிருக்கின்றன. அந்தமார்க்கமாய்பிரஸ்தாபதொடரைத் திறப்பதால் திருநெல்வேலிஜில்லாவின் முக்கியபாகத்தை சௌகர்யமாய் இணைத்து விட்டதாக நேரிடும். இதை விட்டு கேவலம் பனங்காட்டு வழியாகக் கடற்கரையோரமாய் கண்ணைமூடிக் கொண்டுபோவது போல் குலசேகரன்பட்டணத்தில் வண்டியைக் கொண்டுபோய் அவிழ்த்துவிட்டதனால் யாதொரு பிரயோஜனமுமேற்படாது எனவே ஜனநன்மையில் பெரிதும் சிரத்தை கொண்டுள்ள ஜில்லாப்போர்ட் அங்கத்தினர்களும், கனம் பிரசிடெண்டவர்களும் விசேஷ கவனம் செலுத்தி பொதுஜன வேண்டுகோளை அனுசரித்து பரமன்குறிச்சி முதலிய ஊர்ப்பகுதி வழியேபுதியதொடரைத் திறக்கஏற்பாடு செய்வார்களென நம்புகிறோம். இம்பகுதி வாசிகளும் இந்தநல்லசமயத்தை தவறவிட்டு விடாமல் எல்லா ஊர்க்காரர்களும் ஏகோபித்து மகஜரனுப்பியும் பிரசிடெண்ட் அவர்களையும் பிரபல அங்கத்தினர்களையும் பிரதிநிதிக் கோஷ்டியார் பேட்டி கண்டு விஷயத்தை எடுத்துரைத்தும் ஆரம்பத்திலேயே விடாமுயற்சியுடன் வெற்றிபெறப் பின்னடையார்களென நம்புகிறோம்.

வேதவ்யாஸன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# பர்மா வர்த்தமானம்.

:()*():

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

## பர்மா சட்டசபை.

16-3-23-ல் நடைபெற்ற ஷை சபையில் கிழக்கு இரங்கோன் வாக்காளர்களால் முதல்வராக தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் எ. நாராயண ராவ் எம். ஏ; எம். எல். ஸி. அவர்கள் பர்மா ராஜீயக் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமாய் ஓர் தீர்மானம் கொண்டுவந்து மிகவிரிவாகப் பேசினார்.

அதாவது:-"இச்சபையைத் தொடங்கியபோது நமது கவர்னராகிய ஸர் ஹார்கோர்ட் பட்லர் கூறியவிதமாக சீர்திருத்தம் தனக்குத்தானே பயப்பட்டுக்கொள்ளக்கூடாது சட்டங்களை, ஜனங்கள் மேல் பார்க்கும் யோக்யதை நாட்டுக்கு வந்துவிட்டதென்பதை பலரும் அறியுமாறு ஒரு தகுதியான காரியம் செய்வோம். ஜனங்களுடைய மனதிற்பட்டு அவர்களது நன்றியையும் கோடிக்கணக்கான நமது தேசத்தார்களுடைய நல்லெண்ணத்தையும் பெறும்படியான காரியம் செய்வோம். உயிர்த்து நிற்கும் ஜீவ அன்பை நம் வசப்படுத்திக் கொள்வோம். கட்டை போல், சொன்னபடி நடக்கும் உடலை தள்ளிவிடுவோம். தேசஜனங்களது செறிப்பலத்தைநம்பி யிருப்போம். தேவன்மையைநம்பவேண்டாம்" என்பதுபோல் பாண்டிய நாடார்களே! சென்னை மாகாணச் சட்டசபையில் நம்மவர்கள் அமரும் காலம் நெருங்குகிறது. நமது பிரதிநிதியாகவும், நமது ஜில்லா வாசிகளின் பிரதிநிதியாகவும், நமது குலம் நலம் பெருக, நாம் தெரிந்தெடுக்கப்போகும் கனவான் உடல், பொருள் ஆவிமூன்றையும் தத்தம் செய்யவர் யார் என்பதையும் நாம் தெரியவேண்டிய தநமது கடமையே

• • •

## ராஜீயக் குற்றவாளியாக கடினகாவல்.

சென்ற ஜனவரி [illegible] இந்திய ராஜாங்கத்தினிடம் அட்ரீதியை உண்டுபண்ணுவதென்பதும், நிச்சயமாய்த் தெரிகிறது" என்று மங்கூன் ஜில்லா மாஜிஸ்டிரேட்டு ஒருவருக்கு கடினகாவல் விதித்தார்.

• • •

## ரெட்டியார் ஹைஸ்கூல்.

கோடீஸ்வரா பிரபுவெனவிளங்கின காலஞ்சென்ற ஸ்ரீமான் சிதம்பர ரெட்டியாரவர்களின் தயாள குணத்தால் இரங்கூனில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஹையர்தர வித்தியாசாலையின் வருஷாந்தர பரிசளிப்பு வைபவம் 16-3-23 வெள்ளிக்கிழமை மாலை ஷை ஸ்கூல் ஹாலில் நடைபெற்றது. இரங்கூன் ஹைக்கோர்ட் பிரதமநீதிபதி ஆனாயில் ஸர் வில்லியம் யங் அக்கிராசனம் வகித்தார். வித்தியாசாலை, வாழைகளாலும், தோரணங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. பெண்களால் கடவுள் ஸ்துதிபாடச் சபை ஆரம்பமானது. ஷை ஸ்ரீமான் சிதம்பர ரெட்டியாரவர்கள் குமாரர் ராவ்சாகிப் வஸ். ராமநாதரெட்டியாரவர்களும் ஜஸ்டிஸ் மேஒங்கும், விஜயமாயிருந்தனர்.

ஸ்கூல் சூப்பரின்டெண்டு ஸ்ரீமான் சத்தியநாத நாடாரவர்கள் பி. ஏ, எல். டி. வருஷாந்தர ரிப்போர்ட்டைபடித்தார். பரீக்ஷையில் தேர்ச்சியடைந்த பையன்களுக்கும் பெண்களுக்கும் அக்கிராசனரால் பரிசு வழங்கப்பட்டது. பின்னர் வெகு விரிவாக அக்ராசனர். தமது முடிவுரையாக பாடசாலையின் அபிவிருத்தியை முன்னிட்டும் சாரண இயக்கத்தைப் பற்றியும் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்கு அஸ்திபாரம் போட்ட இடம் இப்பள்ளிக் கூடம் என்பதை மறக்கக்கூடாது என்றும் பேசினார்.

கடைசியாக அக்கிராசனருக்கும் ஸ்ரீமான் ரெட்டியாரவர்களுக்கும் பர்மாசட்டசபை மெம்பர் ஸ்ரீமான் எ. நாராமண ராவ் எம். ஏ. அவர்கள் வந்தனோபசாரம் கூறினார். சபை முடிவுற்றது. பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குவதிலும் வருஷமொரு முறை பற்பல தலைவர்களால் மாணவர்

# அநுபோகக் குறிப்புகள்.

## சமயோசித முறைகள்.

1. வேஷ்டியில் மைவிழுந்துவிட்டால் மை விழுந்தஇடத்தில் எலுமிச்சம்பழச் சார்விட்டு தேய்த்து பிழிந்தால் உடனே கறை எடுபடும்.

2. பழக்கறை, வாழைஇலைக்கறை வாழைக்காய்க்கறைவிழுந்துவிட்டால் ஷை கறை விழுந்தவேஷ்டி முங்கும்படியான மாட்டுப்பாலோ ஆட்டுப்பாலோஒருபாத்திரத்தில் [illegible] வேஷ்டியை முக்கி ஊரவைத்து தேயத்தால் உடனே நீங்கிவிடும்.

3. இரத்தக்கறை பட்டுவிட்டால் மண்ணெண்ணெயில் ஷை கறைபட்ட இடத்தை முக்கி ஊரவைத்து தேய்த்து கழுவினால் கறையெடுபடும்.

இது பெரியோர் அநுபோகமுறை பரிசோதித்தது.

• • •

## சர்பத்செய்யும் முறை.

1. கிராட்சப்பழ ஷர்ப்பத்து:—கிராட்சப்பழ சாறைபிழிந்துவடித்துக்கொண்டு அதற்கு சரிஇடை சீனியாவது கற்கண்டாவது சேர்த்து இரண்டரை பலம் பன்னீர்விட்டு காய்ச்சிப்பாகுபதத்தில் இறக்கி சீசாவில் அடைத்து மூன்று ரூபாய் இடை ஷர்பத்தில ஆறுரூபாய் இடை தண்ணீர்கலந்து சாப்பிட்டுவந்தால் உஷ்ணத்தை நீக்கும்.

2. எலுமிச்சம்பழ ஷர்பத்து:—முற்றின எலுமிச்சம்பழ ரசத்திடைக்கு இரட்டிப்பு சீனிகலந்து காய்ச்சிபாகுபதத்தில் சீசாவில் அடைத்துக்கொண்டுமூன்று ரூபாய் இடை ஷர்பத்துக்கு ஆறு ரூபாய் இடை தண்ணீர் கலந்து சாப்பிட்டு வந்லால் பித்தம் தீரும். **M M. & Son**

[illegible] கடமையும் பிற்கால வாழ்க்கை [illegible] ஆரம்பமானே [illegible] முறைக்கத்தேவை இல் [illegible] ஹைஸ்கூல் மானேஜிங் கமிட்டியார் இம்முறையை கையாளுவார்களாக.

• • •

## தென் இந்திய வியாபாரக் கம்பெனி

## South India Trading Co;

ஷை நாமதேயங்கொண்ட ஒரு கம்பெனி 1921-வருஷம் மே மாதம் 4-தேதி இரங்கூன் மெர்ச்சன்வீதி 128 129 நீர். கட்டடத்தில் அமைக்கப்பெற்றிருக்கிறது. ஷை கம்பேனியில் பெரிய மரங்களை சிறிய துண்டுகளாக அறுப்பதும் பலவித விசித்திர மரவேலைகளும் இயந்திர உதவியால் செய்யப்படுகின்றது. ஷை கம்பேனி நமது மித்திரன் போஷகப்பிரபு ஸ்ரீமான் சி. சாமியப்பா நாடாரவர்கள் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. பன்னிரண்டுபேரின் பங்கின்பேரில் 36 00 ரூ மூலதனத்துடன் நடைபெற்றுவருகிறது. பங்காளிகள்பின் வருமாறு ஸ்ரீமான்களான சி. சாமியப்ப நாடார், கே. பி. பொன்னையா நாடார், ந. தி. வெள்ளையா நாடார், த. வ. சீ. கிருஷ்ண நாடார், பெ. ப. சின்னக்காளை நாடார், பெ. சி. ப. சிவனுநாடார், மா. கருப்பையாநாடார், எஸ். தங்கப்பாண்டி நாடார், கெ. ம. ஒ. பெரியமீரா ராவுத்தர், ஆ. இ. நாகூர்மீரா ராவுத்தர், வீ, முத்துவேலு சேர்வை, ப. வீ. குருசாமி சேர்வை முதலியவர்கள் நமது ஜனசமூக முற்போக்குக்கு இப்பேர்க்கொத்தகூட்டு முறை பங்குகொண்ட கம்பேனிகள் மேன்மேலும் விருத்தியாக வேண்டியதவசியம். ஆதலால் 'சௌத் இந்தியா' டிரேடிங் கம்பேனி' சொந்தக்கார நம்குல கனவான்கள் நம்மவர்களுக்கு இவ்விஷயத்தில் முன்மாதிரியா யிருக்க கம்பேனியை சிறத்தையோடு நடத்தி வழிகாட்டுவார்களாக. மானேஜர் ஸ்ரீமான் ந. தி. வெள்ளையா நாடாரவர்கள் முயற்சி எடுத்துக் கொளளுமாறு வேண்டுகிறோம்.

## சென்னை சட்டசபை எலக்ஷனும், மிஸ்டர் எட்வின் பெரியநாயக நாடாரும்.

நமது குலப் பத்திரிகைகளில் சென்னை சட்டசபை எலக்ஷன் விஷயமாய் இடைவிடாது பலவியாசங்களும் விண்ணப்பங்களும் தோன்றியபோதிலும் நாளது வரை நமது இனத்தாரில் மிஸ்டர் எட்வின் பெரியநாயக நாடாரைத் தவிர மற்றவரும் அபேக்ஷகராயிருப்பதாக பத்திரிகைகளுக்கு தெரிவித்துக் கொள்ளாததைப் பார்க்கச்சற்று ஆச்சரியமாயிருக்கிறது. சட்டசபை மெம்பர் ஸ்தானத்தை அபேக்ஷிக்கும் மற்ற கனவான்களும் [illegible] தெரிவித்தால் தான் பிரசாரவேலைசெய்கிறவர்களுக்கும் சந்தோஷமாயிருக்கும்.

மிஸ்டர் எட்வின் பெரியநாயக நாடார் கவுன்ஸில் செகிரட்டேரியாக யிருப்பதினிமித்தம் மந்திரிமார்களுடனும் தலைமை உத்தியோகஸ்தர்களுடனும், அன்னியோன்னியமாய்ப் பழகி சென்ற 2½வருஷ காலத்தில் பொதுவாய் இந்திய கிறிஸ்தவர்களுக்கும் முக்கியமாய நாடார்களுக்கும் அநேக சகாயங்கள் செய்திருக்கிறார்களென்பதை நேயர்கள் நன்கு அறிவார்கள். அவற்றில் சில விஷயங்களை மட்டும் கூறுகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் குதிரைமொழித்தேரி என்றுசொல்லப்பட்ட இடத்தில் சுமார் 13000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காடு ஒன்று உண்டு. அது ரிசர்வ் பாரஸ்டாயிருப்பதால் குடிகளுக்கு சென்ற 70 வருஷகாலமாய் அநேகஇம்சைகளும்அசௌகரியங்களுமிருந்தன. அந்த இடத்திற்கு சென்றவருஷம் மிஸ்டர் பெரியநாயக நாடார், ஜில்லா பாரஸ்டு ஆபீஸருடன்சென்று, நன்றாய் சுற்றிப் பார்த்து பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு எழுதியதின்பேரில் கவர்ன்மெண்டாரும் அவைகளை ஒப்புக்கொண்டு சீக்கிரத்தில் அந்த காடு பூராவும் பாரஸ்டு லாக்காவிலிருந்து நீக்கப்படுமென்று உத்திரவளித்திருக்கிறார்கள். அந்த உத்திரவினால் சுமார் 10000 நாடார்களுக்கு செளகரியம் உண்டு.

இதைத் தவிர ஆழ்வார்திருநகரிக்குப் பக்கத்தில் தாம்பிரவருணி நதிக்கரையில் ஆழ்வார்தோப்பு என்ற ஓர் ஊர் உண்டு. ஆற்றில் வெள்ளம் வரும் காலங்களில் அந்த ஊரிலுள்ள ஜனங்கள் வீடுகள் இடிந்தும், பயிர்கள் அழிந்தும் படும் கஷ்டங்களுக்கு ஓர் அளவில்லை. சரியான இடத்தில் போதுமான கரையில்லாததால் இந்த கஷ்டம் 1853 ஹூ த்திலிருந்து இருக்கிறது. அந்த இடத்திற்கும் மிஸ்டர் பெரியநாயக நாடார் எக்ஸிகியூட்டிவ் எஞ்சினியருடன் சென்று ஜனங்கள் படும்அவஸ்தையை நீக்க கவர்ன்மெண்டாருக்கு எழுதியதன்பேரில் கவர்ன்மெண்டாரும் கரைபோட தீர்மானம்பண்ணியிருக்கிறார்கள்.

இன்னும் சேர்மா தேவிக்குப் பக்கத்திலுள்ள பத்மனேரிகிராமத்தில் பிராமணப் பண்ணைக்காரர்களுக்கும் நாடார்களுக்கும் ஒரு கால்வாய் விஷயமாய் பலத்த விவகாரம் நடந்தகாலத்தில் அந்த இடத்திற்கும் மிஸ்டர் நாடார் சப் கலெக்டர் எஞ்சினியர் சகிதம் சென்று விவசாயிகள் கான்பரன்ஸ் ஒன்றைக் கூட்டி சில தீர்மானங்கள்செய்து, கவர்ன்மென்டாருக்கு தெரிவிக்க கவர்ன்மெண்டாரும் இப்பொழுது அத்தீர்மானங்கள் விஷயமாய் ஆழ்ந்தயோசனை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இந்து மதபரிபாலன மசோதா மந்திரிமனதில் உதித்த நாள்முதல் அது சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தேதிவரையில் இந்துநாடார்கள் விஷயமாய் மிஸ்டர் எட்வின் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு ஓர் அளவில்லை.

இப்படி உதவிகள் செய்துவரும் இக்கனவானையே மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களிலுள்ள கிறிஸ்தவ நாடார்கள் மறுபடியும் சென்னை சட்டசபைக்கு மெம்பராக தெரிந்தெடுப்பார்களானால் எல்லோருக்கும்அதிக நன்மைகள் ஏற்படுவதோடு, இப்பொழுது செக்ரட்டேரி ஸ்தானத்திலிருக்கும் நமது நண்பர் சீக்கிரத்தில் மந்திரி ஸ்தானத்தை வகிப்பதற்கும் அனுகூலமாயிருக்கும். ஆகையால் கிறிஸ்தவ நாடார்களெல்லோரும்வகமனதுடன் மிஸ்டர் எட்வின் பெரியநாயக நாடாருக்கே தங்கள் ஓட்டுகளை பதிவுசெய்து அன்னவரையே மறுமுறையும் சென்னை சட்டசபைக்கு அங்கத்தினராக அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன். S. நடராஜநாடார் B.A;B.L;

சிவகாசி.

# பொது வர்த்தமானம்.

## மலையாளத்தில் மீண்டும் கலவரம்.

மலபாரில் மறுபடியும் மர்யநாடின் இடத்தில் மாப்பிள்ளைமார்களுக்கும் நாயர்களுக்கும் சில்லரைக் கலவரங்கள் நடந்துகொண்டுவருவதாகத்தெரிகிறது. இந்து முஸ்லீம் ஒற்றுமை வேண்டுமென்று ஒரு பக்கம் பறையறைந்துகொண்டு வருமிக்காலத்தில் இப்படிப்பட்டசில்லரை சண்டை நடப்பது விசனிக்கத்தக்கதே. பானையம் என்ற மற்றொரு இடத்தில் நாயர்களும் மாப்பிள்ளைகளும் கலகம் செய்துகொண்டதினால் இருதரப்பிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

• • •

## தற் கொலை.

கும்பகோணத்தில் குற்றாலத்தைச்சேர்ந்த பணக்கார மிராசுதாரன் கோவிந்தசாமி பிள்ளையை மாட்டுக்களவில் சந்தேகப்பட்டுப் போலிசார் கைதுசெய்து வைத்திருந்ததில், அவர் தூக்கிட்டுக்கொண்டு உயிர்துறந்தாராம். இதற்கு முன் இருமுறை இவர் இத்தகைய சிறு வழக்கிலகைது செய்யப்பட்டாராம். தற்கொலைக்குக் காரணம் தெரியவில்லை.

• • •

## மிதுனபுரியில் தீ விபத்து.

மிதுனபுரியைச் சேர்ந்த கொலாபஜாரில் மே மாதம் 7 தேதி திடீரென்று ஓர் தீ விபத்து ஏற்பட்டது. அதனால் 15 செம்படவர்களின் வீடுகள் அடியோடு எரிந்து கீழே விழுந்தன.

• • •

## போலீசாருக்கும் சிப்பாய்களுக்கும் கலகம்.

மே மாதம் 12-ந் தேதி பங்களூர் தண்டு நாடகக்கொட்டகையில் கலகம் நடந்தது. அது சம்பந்தமாக மாணிக்கம் வரதன் முதலிய 11 பேர்கள் அரசாங்க ஊழியர்களுக்கு இடையூறு விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். 18-ந் தேதி அவர்கள் விசாரணை நடைபெறும்.

• • •

## பெரிய தீ விபத்து.

மே மாதம் 10-ந்தேதி செவ்வாய்க்கிழமை பன்றையத்தினம் டப்ராஜபூர் என்ற முஸலீம கிராமத்தில் திடீரென்று ஒரு பெரிய தீவிபத்து ஏற்பட்டது.

"3000 வீடுகள் எரிந்து போயின 15,000 ஜனங்கள் வசிக்க இடமில்லாமல் தவிக்கிறார்கள்"

• • •

## லேடி நார்த்கிளிப் விவாகஞ் செய்து கொண்டார்.

இங்கிலாந்தில் அநேக பத்திரிகைகளுக்குச் சொந்தக் காரராயிருந்து சமீபத்தில் காலஞ் சென்ற லார்டு நார்த் கிளிப்பின் மனைவியார் ஹார்ட்லிபரிகாஸிலில் ஸர் ராபர்ட் ஹட்ஸன் என்பவரை மணம்புரிந்து கொண்டாராம்.

பிரத்தியேக லைஸென்ஸ் பெற்று ஹார்டிலிபரிகாஸலின் மாதா கோவிலில் விவாகச் சடங்கு நடத்தப்பட்டது. ஓர் லஸ்டர் பிஷப் விவாகச் சடங்கு நடத்தினாராம்.

• • •

## காலஞ் சென்றார்.

நமது தேசமுன்னேற்றத்திற்காக உழைத்துவந்த ஸர் நாராயண சந்தர் வார்க்கர் 14-5-23 யில் காலை பத்துமணிக்கு பங்களூரில் இரத்தாசயநோயால் மரணமானார். இவர் சிலகாலம் பம்பாய் ஹைக்கோர்டு ஜட்ஜுகளில் ஒருவராக யிருந்தார். மேலும்இவர் நாடார்களின்நண்பர்.

• • •

புதுச்சேரியில் கூடியசீக்கிரத்தில் ஒரு கம்பி இல்லாத தந்திச்சாலை ஸ்தாபிப்பதாகத் தெரிகிறது.

• • •

மணி 1-க்கு 280 மைல் பறக்கும் வர்லில்லா ஆகாயக்கப்பல் ஒன்று பிரான்சியேர்மேன் ஸ்ரீமான் ரினி ஆர்னோ என்பவரால் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

## ஜாதி முன்னேற்றத் திற்குப் பாடுபடுவதே தேச முன்னேற்றம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
ருத்ரோத்காரி ஞு வைகாசி மீ 8உ.

## தேசக் கட்சிகள்.

நமது பாரத நாட்டின் க்ஷேமத்தைநாடி வெகுகாலமாக தீவிரமுயற்சி செய்துவந்தது காங்கிரஸ் மகாசபை யொன்றேயாயினும் ஐரோப்பா மகாயுத்தந் தோன்றிய பின்னர் எழுந்த புது உணர்ச்சியால் ஏற்பட்ட தேசியக் கட்சிகளில் முக்கியமானது மிதவாதக்கட்சி அமிதவாதக் கட்சி யென்ற இரண்டு கட்சிகளே தலை தூக்கி நின்றன. நமது சென்னை மாகாணத்திலோ பிராமண ரல்லாதார் கட்சி யொன்று மூன்றாவதாக நின்றது. தற்சமயம், தேசீயக் கட்சியிலும் சுயராஜ்யக் கட்சி யென்று ஒன்று புதிதாகத் தோன்றி பொதுவாகத் தேசத்தில் முக்கியமானதும் ஜனப்பெருக்குடையதுமான கட்சி மூன்று கட்சிகளென்று என்னும்படி நேர்ந்துள்ளன. மற்றும் பல சிறுகட்சிகளிருப்பினும் அவை மேற்கண்ட மூன்று கட்சிகளில் ஒன்றைப்பற்றி யுள்ளனவே யன்றி பலம்பெற்ற ஒரு தனிக்கட்சி யென்று சொல்ல முடியாது. இம் மூன்று கட்சிக்காரர்களும் தேசநிர்மாணத் தத்துவங்களைப்பற்றி வெளியிடப் பெற்றிருப்பதில் பலவேற்றுமைகள் காணப்படினும் முடிவில் ஒரு பாதையில் வந்து கூடும்படியானவை யென்பதற்கும் ஐயமில்லை.

இப்போது வங்காளத் தலைவர் தேசபந்து தாஸ் அவர்கள் சுயராஜ்யக் கட்சியின் அமைப்பைப் பற்றி வெளியிட்ட அறிக்கை யொன்று பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. அவர் வெளியிட்டிருக்கும் தத்துவங்களை ஒவ்வொருவரும் உற்று நோக்கி மாறில்லா தொழுகுவார்களே யானால், அவர் கொண்ட உத்தேசங்கைகூடு மென்பது திண்ணம். மேலும் தேசத்திற்காக தங்கள் நலபலனைத்தையும் தியாகம் செய்த் தலைவர்கள் வெளியிட்டு வரும் ஒவ்வொரு அறிக்கைகளும் சகலரும் ஒப்புக்கொள்ளத் தக்கதாயிருந்தாலுங்கூட அந்தந்தத் தலைவர்கள் கட்சியை ஆதரிப்பதாகச் சொக்கூடிய மனிதர்களுடைய செய்கையினாலே பெயர்ப் பெற்ற தலைவர்கள் தீர்க்காலோசனை செய்து வெளியிட்ட தத்துவங்களெல்லாம் சீர்குலைந்து அக்கட்சியும் வெற்றிபெறுவதற்கு மார்க்கமின்றி முழுதுங் கெட்டு தலைவர்களையும் நிலைகுலையும்படி செய்து விடுகிறது.

சின்னாட்களுக்கு முன்னரே மகாத்மா காந்தி ராஜீய விஷயத்தில் பரமார்த்திக ஞானத்தைப் புகவிட்டு, உண்மையான சுயராஜ்யம் அடைய வேண்டுமாயின் அரசாங்கத்தாருடன் ஒத்துழையாமைப் போரை நடத்த வேண்டிய அவசியமென்று ஜனங்களுக்கு உபதேசித்து வந்தார். அவருடைய மேலான நோக்கங்களுக்கு இசைந்து நடப்பவர்கள் ஒரு சிலரைத் தவிர மற்றவர்களெல்லாம் தாங்கள் தாங்கள் கொண்டிருக்கும் குருட்டு நம்பிக்கைகளை நிறைவேற்றி வைப்பதில் கவலையுள்ளவர்களாய் ஜாதித்துவேஷங்களையும் மதத் துவேஷங்களையும் ஒப்பிவிட்டு தேசமெங்கும் சமாதானக்குறைவை யுண்டாக்கி கட்சிக்குள்ள பலத்தையும் குறைவுபடுத்தி அதிகாரவர்க்கத்தின் ஆக்கிரமத்திற்கும் ஆளாகி அநேக யோக்ய தலைவர்களையும் காராக்கிரகத்தில் அடைக்கும்படியாய் நேர்ந்துவிட்டன. ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் மகாத்மா ஸ்தானத்திலிருந்து தமது வேலையை நடத்துகிறார்.

அதிகார வர்க்கத்தை ஆதரித்து நிற்கும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களால் பிராமண ரல்லாதாருக்குள் ஒரு உணர்ச்சி தோன்றி அவ்வகுப்பினர்களுக்கே சிறிது நன்மைக்கேற்றமார்க்கங்க ளுண்டாயினவாயினும் அவர்களுடைய முழுக் கவனமெல்லாம் அதிகாரவர்க்கத்துக் காதரவு காட்டவும், அதிகாரங்களை அடையவும், பிராமணர்களை அடக்கவுமான வழியிலேயே கண்ணேக்காமாயிருந்து விட்டார்கள்.

தற்சமயம் தாஸ் வகையறாச் சுயராஜ்யப் புதுக்கட்சித் திட்டத்தைப்பார்த்ததும் அதற்கு ஆதரவு காட்டுவதாக அநேகர் முன் வந்திருக்கிறார்கள். தாஸ் வெளியிட்டிருக்கும் தத்துவங்கள் ஒப்புயர்வுள்ளதும் உண்மையுள்ளதுமானவையே. ஆயினும் அதற்காதரவாக ஆர்ப்பாட்டம் பண்ணும் ஆசாமிகள் உண்மையோடு நடந்து கொள்வார்களா வென்பது சந்தேகந்தா னென்று நினைக்க இடமிருக்கிறது. ஏனெனில் உண்மைத் தேசாபிமானிகள் சட்டசபையைக் கைப்பற்றிஉள்ளிருந்து ஒத்துழையாமையை அனுஷ்டித்து அதிகாரக் கோட்டையைத் தகர்த்து விடலாமென்று கருதுகிறார்கள். சட்டசபையை விட்டதினாலன்றோ மற்றொருசாரார் வந்து தமக்கிஷ்டம்போல சட்டங்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள், அதனால் நமது பிறப்புரிமைக்கே கஷ்டங்களுண்டாகின்றது. ஆகையால் மறுபடியும் அதை நாம கைப்பற்றிக் கொண்டால் நமது சுயநலத்திற்கு யாதொரு தீங்கும் வராமல் பாதுகாக்கலாமென்ற நோக்கத்தை கொண்டவர்கள் அதிகமிருப்பதினாலேயாம் தாஸின் திட்டத்தை பேச்சளவில் அனுஷ்டிக்கிறவர்களா யிருப்பரேயன்றி செய்கையில் காட்டுவது அசாத்திய மென்றே நம்புகின்றோம். ஒருக்கால் தாஸ் நோக்கப்படி அவர்கள் கோஷ்டியாருக்குவெற்றிகிடைப்பினும் சபாமண்டபத்தில் புகுந்தவுடன் சரணாகதி யடைவரேயன்றி தாஸின் திட்டத்தை நிறைவேற்றுவதில் சாதிக்கும் வன்மையுடையவர்களாயிருக்கமாட்டார்கள். அப்போது தாஸ் கட்சிக்குள்ள பலமும் போய்விடக் கூடும்.

பல ஜாதிமதப் பிரிவுள்ள ஒரு பெரிய தேசத்தில் பற்பலவிதமான அபிப்பிராய பேதங்களோடுங் கூடிய பலவகைத் திட்டங்களை யேற்படுத்திக் கொண்டு பலபிரிவுகளாய்ப் பிரிந்து வேலை செய்வதில், உள்ள பலமுங் குலைந்து போகிறதேயன்றி ஒன்றேனும் ஊக்கத்துடன் ஒழுங்கான முறையில் இதுவரையும் வேலை செய்து வந்ததாக யில்லை. நிர்மாணத்திட்டங்களை நிறைவேற்றிவைப்பா மென்று மார்தட்டி முன்வருகின்ற சாதாரணப் பேர்வழிகள் தலைவர்களுடைய உண்மையைக் கடைப்பிடித்து நடவாமல் ஒழுங்கீனமான செய்கையிலிறங்குவதினாலேயே பேராபத்திற்கிடமுண்டாகிறது. மேலும் சுயராஜ்யத்தையடைவதானால் எவ்வளவு தியாகம் செய்யவேண்டிய திருக்கும் என்பதைச் சரிவர உணராமல் மகாத்மா வந்துவிட்டார் இனி நமது ராஜ்யந்தானென்ற பெரும் நோக்கமாய்மனம் போனவாறு நடந்துகொள்வதினால் வீண் குழப்பங்களுண்டாகி கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போவதுடன் தன்னுடையுங்கெட்டலைய வேண்டியதாகிறது.

தவிர ஒவ்வொரு கட்சிக்காரர்களும் தேசத்திலநியாயமாகிய தீண்டாமையை ஒழிக்கவேண்டு மென்று தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். வெகு அழுத்தமாகவும் பேசுகிறார்கள். ஆனால் எந்தக்கட்சிக்காரர்களாவது அவ்விஷயத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தவர்களென்றாவது அனுவளவேனும் நினைப்பதற்கில்லை. நாமெல்லோரும் ஒன்றென்றும் ஒன்றாகி விட்டோமென்றும் அந்நியர் உணர்ந்துகொள்ளட்டுமென்று காட்டுவதற்காகச் செய்கிற தீர்மானங்களாக யிருக்கிறதேயன்றி உண்மையாக உள்ளதைக் காட்டுங்குறிப்பாக யில்லை இம்மேல்ப்பூச்சை அறிவோர்களறியாமலுமில்லை. எந்தக் கட்சிக்காரராயினும் சரி, தேசக்ஷேமத்திற்கு அடிப்படையான நிர்மாணத் திட்டங்களில் சமூகக்கட்டுப்பாடுகளும் தீண்டாமையும் முக்கியமான தென்பதை யுணர்ந்து அக்குறைகளை நிவர்த்தி செய்து சகலரையும் ஒன்றாய்ப்பிணைத்து முன்னடத்திச் செல்லாமல் ஒரு சில வகுப்பினர் மட்டும் சுயராஜ்யம் அடைந்துவிடலாமென்று நினைப்பது அம்புலியைப்பிடித்து விளையாட நினைக்கும் குழந்தைகளின் செய்கையை ஒக்கும். கெனியா கெட்டால் கானடா ஆஸ்திரேலியா முதலிய குடியேற்றநாட்டு இந்தியர்களுக்குக்காட்டும் அனுதாபமும் அனுதாபமாகாது.

ஆகவே உண்மையான சுயராஜ்யம் அடைய வேண்டுமானால் உண்மையான தேசாபிமானிகளாக வேண்டுமானால் உண்மையான தலைவர்கள் உண்மையான நிர்மாணத் திட்டங்களை உண்மையாக நிறைவேற்றி வைப்பதில் உண்மைக்கு விரோதமின்றி ஒழுங்கீனமான ஜாதிக்கட்டுப்பாடுகளை ஒழித்து ஒற்றுமையோடு சகலஜன சமூகத்தையும் ராஜீயத்துறையில் ஒன்றாய்ப் பிணைத்து உத்தமமான வழியைக் கடைப்பிடித்து நடப்பதே உத்தமமென்று நம்புகின்றோம்.

## குறிப்புகள்.

### கான்பரன்ஸ் கமிட்டி.

நமது 9-வது கான்பரன்ஸையாதவது ஒரு ஊரில் நடத்துவதற்கேற்பட்ட கமிட்டி 13-5-23யில் திருநெல்வேலிக்குப் புறப்படப் போவதாக சென்ற மித்திரனில் குறிப்பிட்டிருந்தது நமது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆனால் அந்தக்கமிட்டி குறிப்பிட்ட தேதியில், புறப்படுவதற்கு சௌகரியப்படாமல் 18-5-23 யில்தான், திருநெல்வேலிக்குப் பிரயாணமாகியிருக்கிறதாக, மதுரையிலிருந்து நமது நிருபர் எழுதுவதிலிருந்து தெரிய வருகிறது.

9-வது கான்பரன்ஸை திருநெல்வேலியில்தான் நடத்தவேண்டு மென்று நம் மகாஜனங்களும் நினைக்கிறார்கள். ஆகையால் அங்குள்ள குலாபிமானிகள் வந்த கமிட்டியின் அரிய கோரிக்கையை பூர்த்திசெய்து வைப்பார்களென்றே நம்புகிறோம்.

### மகாஜன சங்கத்தாரே ஆரம்பிக்க வேண்டும்.

சென்னை சட்டசபை தேர்தல் காலமோ மிகவும் சமீபித்துக் கொண்டேவருகிறது. நமதுகுல அபேக்ஷகர்களுக்காக நாம் வேலை செய்யவேண்டியதோ அபாரமாயிருக்கிறது. அந்நிலைமையில், நம்மவர்களில் சிலர், அபேக்ஷகர்களாய் நிற்க தகுதியுள்ளவர்களாயும் பிரியமுள்ளவர்களாயுமிருந்தும், முதல் முதலில் எப்படித்தான் தாங்கள் அபேக்ஷகர்கள் என்று முன்வருகிறது என்று பலத்தயோசனை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் யோசனை தெளிந்து கொண்டேவரும் வரை நாம் காத்திருப்ப தென்றால் அய்யர்வரும்மட்டும் அமாவாசை காத்திருக்காததுபோல் நமக்காக சட்டசபைத் தேர்தல்காலம் காத்துக் கொண்டிருக்காதென்பதையும் நாம் கவனித்து அதற்குத்தக்க ஏற்பாடு செய்யவேண்டிய திருக்கிறது.

ஆகையால் மகாஜன சங்கத்தாரேதான் ஸ்பெஷல் மீட்டிங் கூட்டி பொதுவாக தகுதியுள்ளவரையும், குலசேவை விரும்பும் நம்குல அபேக்ஷகர்களை தேர்ந்தெடுத்து ஜில்லா வாரியாக நிறுத்துவதற்குத்தக்க ஏற்பாட்டைத்தொடங்கவேண்டும்.

## பிரயாணத்தில் கண்டகாக்ஷி.

(முன் தொடர்ச்சி)

### இரங்கூன்.

சீனக்காரர்கள் அநேகர் இங்கே வசிக்கிறார்கள். பிரபல வியாபாரிகளிருக்கிறார்கள். அவர்கள் முக்கியமாய் வசிக்கின்ற பெரிய வீதிகளின் இருபுறங்களிலும் அவர்களுணவுக்குள்ள பற்பல மிருகம் பற்பல பட்சி மீன் முதலிய மாமிசங்களை விற்பனைக்கு பக்குவப்படுத்தி அருவருக்கத்தக்க விதமாய் வீதியில் நெடுக வைக்கப்பெற்றிருப்பதும் சீனர்கள், மேற்படி காப்பிக்கிளப்புகளில் மாதிரி பஜாரில் பந்திபந்தியாய் குந்தியிருந்து கொண்டு கோல்கொண்டு உணவருந்தும் பான்மையையும் அந்தபஜார்களில் பழகிய மாதர்கள் வீதியிலிருந்து சாப்பாடு விற்பதையும் அவ்விடம் அவர்கள் சாப்பிடும் நேர்த்தியையும் பார்த்தால் சுத்த ஆபாசமென்றே சொல்லவேண்டும். ஸிலோகாருண்யமதமாகியபௌத்த மதத்திற்குறைவிடமாயுள்ளபர்மாதேசத்தில் இவ்வளவு கொலைக்காட்சி காணக ஆட்சிக்கத்தாட்சி தான்போலும்! பர்மியரும் ஜப்பானியரும் சீனரும் சயாம்தேசத்தவரும் தோற்றத்தில்ஒத்தவராகக்காணப்படுகின்றனர். மிகவுங் குள்ளமாகவே யிருக்கிறார்கள். மற்றவர்களைப் பார்க்கிலும் பர்மியர் கொஞ்சம் குளிர்ந்த பார்வை யுடையவர்களாய்காணப்படுகிறார்கள்பர்மியருக்குள் ஒரு அபூர்வ வழக்கமாவது நமது தேசத்தில்ஆண்களுக்கு எவ்வளவுசுதந்திர முண்டோ அதைப்போல் பர்மாவில் பெண்களுக்குச் சுதந்திரமிருப்பதாய்த் தெரிகிறது. பெண்கள் வியாபாரம் செய்வதிலும் இதரதொழில்கள் செய்வதிலும் சமர்த்தராய்த் தெரிகிறது. சுயேட்சையாய் ஆடவர்களை தனித்திருந்து எந்தக்காரியத்தையும் நடத்துகிறார்கள். விவாக விஷயத்திலும் பெண்கள் இஷ்டப்பட்டவர்களை மணந்துகொள்ளலாம் அதைப் பற்றி யாரும் தலையிடக்கூடாதாம். இவ்வழக்கம்பிரதானமாயிருப்பதால் அங்கே குடியேறும்யாரையேனும் அவர்கள் இஷ்டப்பட்டால்மாப்பிள்ளையாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். இப்படி வெளி தேசத்திலிருந்து வரும்பலஜாதியாரும் பர்மியப் பெண்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவ் வழக்கம் வரவர சீனர்களோடு சேர்ந்த பெண்களும் அதன் வாரிசுகளும் சீனராகவும், முஸ்லீம்களோடு சேர்ந்தபெண்களும் வாரிசுகளும் முஸ்லீம்களாகவும் இப்படி எந்த இனத்தைச் சேர்கிறதோ அவ்வினத்திலேயே சார்புள்ளதாகிக் கலந்து அத்தன்மையுடையதாகிவிடுவதாய்த் தெரிகிறது. அநேக இந்தியர்களை தன் வயப்படுத்தி பர்மிய வாசிகளாகவும் இந்தியாவை எட்டிப் பார்க்கவுங்கூடாமல் வைக்கப்பெற்றுமிருக்கிறது. இப்பேர்க்கொற்ற விஷயங்கள் அதிகமாய்த்தெரிகிறது. இதுவிஷயத்தில் மிகவுங்கட்டுப்பாடுடைய இந்தியாவே ஆரியருக்கும் ஆப்கானியருக்கும் ஐரோப்பியருக்கும் இடந்தந்து கலந்துகொண்டு எது வந்தாலும் இந்தியா யேற்றுக்கொண்டு தன்வயப்படுத்திக்கொள்ளும் சக்திவாய்ந்ததென்று நாம் பெருமையாய்ப் பேசிக்கொண்டிருக்க கட்டில்லாத பர்மாதேசத்தில் கலப்பேற்பட்டிருப்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. பர்மியர் தெருக்கூத்து நிலாக்காலத்தில் ஆடுகின்றார்கள். அவர்கள் மதக்கொள்கையான சரித்திரங்களை ஆடுகின்றார்கள். நடைஉடை பாவனைகள் நன்றாயிருந்தபோதிலும் அவர்களுடைய ஆட்டங்களும் களினங்களும் சுத்த ஆபாசமாகத் தெரிகிறது. மாசிமீ பௌர்ணமையன்று காமன் பண்டிகையை வங்காளிகள் மிகவும் பிரியமாய்க் கொண்டாடுகிறார்கள். அன்று விடுமுறை நாளை அவர்கள் ஆடிப்பாடிக் கழிக்கின்றார்கள். அவர்கள் பெண்கள் அன்றுவெளியேறுவதில்லையாம். யாரையேனும் கண்டுகொண்டால் அவளை எப்படிமரியாதைக்குறைவாகப்பேசினாலும் குற்றமில்லையாம் இப்படி ஒரு பஜாரில் ஒருபெண் உப்பரிகையிலிருந்து எட்டிப்பார்த்தனள். அவளைக் கண்டதும் ஆயிரக்கணக்கான வங்காளிகள் கூட்டமாய்க்கூடி ஆபாசவார்த்தைகளைச் சொல்லி கூவியழைத்து பலசேஷ்டைகள் செய்கிறார்கள். அப்பெண் அங்கிருந்து தண்ணீரை அள்ளி யிறைக்கின்றாள். அதையும் பொருட் படுத்துகிறார்களில்லை. தலை முகம் மார்பு முதலியவைகளிலெல்லாம் குங்குமங்களை வாங்கிப் பூசிக்கொண்டு வீதிகள்தோறும் ஆடிப்பாடி அலைகின்றார்கள். இஃதெல்லாம் மயானகாளிக்கோலம்போலும்.

(இன்னும் வரும்)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# உள் நினைப்பு.

(நாதன் எழுதுகிறார்.)

சென்னை மாகாணத்தில் திராவிடக் கக்ஷியார் ஒரு பக்கம் சட்டசபையை கைப்பற்ற தீவிரமுயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். மற்றொரு பக்கம் காங்கிரஸ்காரர்களில் ஒரு சாரார் தாங்களே சட்டசபையில் மெஜாரிட்டியினராக (பெரும் பான்மையினராக) யிருந்துகொண்டு கவர்ன்மெண்டார் சுயராஜ்யம் கொடுக்காதவரையில் இராஜாங்கக் காரியங்களும் அதிகார வர்க்கத்தினர்களுடைய யதேச்சாதிபத்தியமும் நடைபெறவிடாமல் முட்டுக்கட்டைபோட எண்ணி, பலத்த ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறார்கள். இன்னொரு பக்கம் ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்க பிரதிநிதிகள் கிடைக்கவேண்டுமென்று பத்திரிகைகளில் தங்கள் அபேக்ஷகர்களை குறிப்பிட்டு எழுதுவதும் அதற்கு தக்க பிரசாரங்களும் இப்போதே செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால், நாடார்கள்யாருக்குவந்த விருந்தோவென்றிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

• • •

நாடார்களிலும் அபேக்ஷகர்கள் இல்லாமலுமில்லை அபேக்ஷகராய் நிற்பதற்கு ஆசையுள்ளவர்கள் இல்லாமலுமில்லை. முதலில் தங்களை பிரஸ்தாபித்துக் கொள்ளுவதற்குத்தான்யோசனை. இதுயார்வீட்டுக் காரியம் யாருக்குத்தான் சொந்தமென்பதை சிறிது சிந்தித்துப் பார்த்திருந்தால் இவ்வளவுதாம் யோசனைக்கு இடமேற்பட்டிருக்காது.

• • •

இன்னொரு ஆக்ஷேபனை வந்து குறுக்கிடுகிறது. அதாவது:-நாம் அபேக்ஷகராய் நின்றால் நாடார் மகாஜனங்கள் ஒப்புக்கொள்ளுவார்களோ வென்ற சந்தேகந்தான்.

• • •

மற்றொரு சந்தேகம் தலைதூக்குகிறது. அதாவது: நாடார்கள் ஒருவாறு ஒப்புக்கொண்டு ஒரு ஜில்லாவிற்கு அபேக்ஷகராய் நிற்கும்படி ஏற்பாடு செய்தவிட்டாலும் தேர்தலில் வெற்றிபெற்று சட்டசபாமண்டபத்தில் வீற்றிருக்கிறோமோ அல்லவோவென்ற சந்தேகந்தான்.

• • •

ஆனால் பட்டின் பெரியநாயகம் நாடார் எப்படித்தான் இப்படிப்பட்ட சந்தேகங்களுக்கெல்லாம் இடங்கொடுக்காமல் அபேக்ஷகர் என்று முன்வந்தாரோ என்றுங்கூட அபேக்ஷகராய் நிற்க ஆசையுள்ளவர்களில் சிலர் நினைக்கிறார்கள்: இதுவென்ன புதுமை!பொதுநன்மையை உத்தேசித்துழைக்கவருபவர்கள்தன்னம்பிக்கையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அதிலும் அதை தங்கள் கடமை என்று நினைக்கவேண்டும். இத்தகைய போலி சந்தேகங்களுக்கு இடங் கொடுக்காமலும் பயப்படாமலும் ஸ்ரீமான் எட்வின் பெரியநாயகம் நாடாரை பின்பற்றி தைரியமாய் அபேக்ஷகர் என்றுமுன்வாருங்கள். ஸ்ரீ பெரியநாயகம் நாடாரைப்பற்றிநம்மவர்கள் நன்கு அறிவார்கள்.

இவர் இப்போதும் சென்னை சட்டசபையில் மெம்பராயிருக்கிறார். சிறிதுகாலம் நமது நாடார் மகாஜன சங்கக் காரியதரிசியாகவுமிருந்து நமது குல முன்னேற்றத்திற்கு உழைத்தவர். ஆகையால் இராமனதபுரம்,திருநெல்வேலி ஜில்லாக்களின் இந்திய கிறிஸ்தவர் தொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்கும் இவர் ஜெயமடையும்படி நாடார்கள் பிரசாரஞ்செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

---

## நமது மன்னர்பிரான் ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களின் இத்தாலிய விஜயம்.

நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் இத்தாலிக்கு அரசி மேரியவர்களுடன் விஜயஞ்செய்து பல முக்கிய பாகங்களை சுற்றிப் பார்த்துவிட்டு சென்றவாரம் தான் லண்டனுக்கு திரும்பிவந்தார். நமது மன்னருக்கு ஆங்காங்கு பற்பல பிரபல வரவேற்புகளும் உபசரிப்புகளும் நடந்தன. இத்தாலியர்கள் பொதுவாக மிகுந்த மரியாதையுடனும்அன்புடனும் நடந்து கொண்டார்கள். வரும்போது பிரான்சு மார்க்கமாய் கலே என்ற இடத்திற்கு வந்து அங்கிருந்து டோவர் என்ற இடத்தில் வந்து இறங்கினர்.

நமது அரசபெருமானுடைய இத்தாலிய விஜயத்தைப்பற்றி பல பத்திரிகைகளும்பலவிதமாய்அபிப்பிராயப்படுகின்றன. சில பத்திரிகைகள் இது ஒரு இராஜதந்திரமாகவே யிருக்குமென்றும் மற்றும் சில பத்திரிகைகள் இளவரசருக்குப் பெண்பார்க்கப்போயிருக்கலா மென்றும்அபிப்பிராயப்படுகின்றன.

# மதுரை.

(நமது நிருபரிடமிருந்து)

தலைக்கட்டுவரிக் கமிட்டி. அருப்புக்கோட்டை விருதுநகர் பாலையம்பட்டி சிவகாசி சாத்தூர்குடி திருமங்கலம் முதலிய ஊர்களில் தலைக்கட்டுவரி வசூலிப்பதற்கென்று கவுன்சிலால் நியமிக்கப்பெற்ற கமிட்டி சின்னாட்களுக்கு முன் விருதுநகரில் இரண்டுநாள் வசூலித்து விட்டு இப்பொழுது இளைப்பாறிக் கொண்டிருக்கிறது. பாக்கி ஊர்களில் எப்பொழுது வசூலாக்கப்படுமென்று பொதுஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

• • •

கான்பரன்ஸ் கமிட்டி. திருநெல்வேலியில் 9-வது மகாநாட்டை நடத்திவைக்க நியமிக்கப்பெற்றகமிட்டியானது இன்று 18-5-23 ல் மதுரையிலிருந்து பிரயாணமாகிறது. ஜூன்மாதத்தில் கான்பரன்ஸ் கட்டாயம் நடைபெற விடாமுயற்சியுடன் வேலை செய்வார்களென்று நம்பலாம்.

• • •

கீழப்பேட்டை. அருப்புக்கோட்டை, விருதுநகர் பாலையம்பட்டி நாடார்களுக்குச் சொந்தமாயுள்ள பேட்டைகளைசீர்திருத்துவதற்காக இருமாதங்களுக்கு முன் விருதுநகர் உறவின்முறை இடைம் வந்து எல்லோரையும் ஒன்றுசேர்ந்து செய்துகொண்டஒருவிதஉடன்படிக்கை இதுநாள் வரை எழுத்தளவிலேயே நிற்கிறது. அவைகளை தாமதியாமல் அநுஷ்டானத்தில் செய்துமுடிக்க நிர்வாகிகள் முன்வரவேண்டும்.

• • •

ஓர் விபத்து: மதுரை பாலம் ஸ்டேஷனுக்கடுத்த ரயில்வே கேட்டில்போய்க் கொண்டிருந்த ஓர் இரட்டைமாட்டுவண்டியானது அச்சமயம் வந்த போட்மெயிலால்மோதுண்டு வண்டியிலிருந்தஇருவரும் இரண்டுமாடுகளும் உயிர் துறந்தனர்.

• • •

## புது பத்து ரூபாய் நோட்டு.

இது நீளம் 6½-அங்குலம் அகலம் 4 அங்குலம் உள்ளது. முன்பக்கம்—நவரிசை பச்சை நிறம் வெள்ளைக்காகிதத்தின் பேரில் அச்சடிக்கப் பட்டிருக்கிறது. அச்சுப்பாட்டின் வலதுபக்கத்திலும் இடது பக்கத்திலும் ஒவ்வொரு ஜன்னல் வரையப்பட்டிருக்கிறது இடதுபக்கத்திலுள்ள ஜன்னலானது வெறுமையினதாயிருக்கிறது. அதற்கு மத்தியில் இந்திய நக்ஷத்திர நீர் எழுத்திருக்கிறது. வலது பக்கத்திலுள்ள ஜன்னலுக்கு மத்தியில் இந்தியக் கிரீடத்துடனும் கழுத்தில் இரண்டு இந்தியமாலைகளுடனும் சக்கரவர்த்தியின் அரைப்படம்கபிலநிறத்தில் வரையப்பட்டிருக்கிறது. அச்சுப் பாட்டிற்குவெளியே நோட்டைச் சுற்றிலும் கரையோரமாக நீர் எழுத்திருக்கிறது. வழக்கமான எழுத்துக்கள் மத்தியில் கபில நிறத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கின்றது. நோட்டின் மதிப்பானது பெரிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பெற்றிருக்கின்றது.மதிப்பு லக்கமாகிய '10' ஆனது நோட்டின் மேல்வலது மூலையிலும் கீழ் இடது மூலையிலும்அமைக்கப்பட்டிருக்கிறது. கீழ் வலதுமூலைக்குமேல் கரன்ஸிகண்ட்ரோலர்அவர்களின் கையெழுத்து கபில நிறத்தில் போடப்பட்டிருக்கிறது. தலைவரிசையின் மேல்கீழ் ஓரங்களில் **Government of India** என்று கபில நிறவார்த்தைகளிருக்கின்றன.

பின்புறம்:- இந்தியாதேசத்தின் முக்கியமான 8 பாஷைகளில் நோட்டின் மதிப்போடு மத்தியிலுள்ள பச்சை நிறமான இந்திய நக்ஷத்திரமே முக்கிய வேலைப்பாடாகும். முன்பக்கத்தில் போலவே நக்ஷத்திரத்தின்வலஇடபக்கங்களில்கபில நிறமான ஜன்னல்கள் இருக்கின்றன. இடதுபக்க ஜன்னல்களின் மத்தியில் கபில நிறமான '**G. R I.** என்ற எழுத்துகளும் அதின்கீழ் பச்சை நிறத்தில் '**Rs Ten**' என்ற வார்த்தைகளும் வலதுபக்க ஜன்னல் வெறுமையாகவும் அதின்கீழ் '10' என்ற லக்கம் பச்சை நிறமாகவுமிருக்கின்றன.

முன்பின் பக்கங்களிலுள்ள ஜன்னல் படங்கள் நேருக்குநேர் அமைக்கப்பட்டிருக்கின்றன.

---

# சுதந்திரம்.

(முன் தொடர்ச்சி)

ஒரு மனிதன் கல்விகேள்விகளில் எவ்வளவு மேலான பதவியையடைந்தவனாகயிருந்தாலும், தன்குடும்ப போஷணையின் நிமித்தம் ஏதாவதொரு தொழில் செய்தே தீரவேண்டியதிருக்கிறது. அது எவ்வளவு பிரபலமானதொழிலாயிருந்தாலும் லாபகரமாயிருந்தாலொழிய தொழிலை நிறுத்திவிட வேண்டிவரும். இதனால் ஒரு குடும்பத்தலைவன் தன்னைச்சேர்ந்தோரை ரக்ஷிக்க பணம் தேடவேண்டியது முதல் கடமை என்றேற்படுகிறது. பல குடும்பங்கள் சேர்ந்த ஒரு ஜனசமூகத்தின் தலைவர்கள் தங்கள் ஜாதியார் பணம் தேடுவதற்கும் தேடி நல்லவழியில்செலவுசெய்து மனிதஜென்மத்தின் கடமையைச் செய்வதற்கும் தூண்டுகோலாகி அந்தவழியில் நின்று காரியம்செய்யும்போது இதர ஜாதியாரால் ஏற்படும் கஷ்டங்களுக்கு காரணமான தடைகளை நிவர்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (நாடார் பொதுஜனங்களும் மகாஜன சங்கமும் எந்தநோக்கத்திலிருக்கிறதென்று பின்னால் கவனிப்போம்) பலஜாதியைக்கொண்டமதம் தேசங்களுக்கும் இன்னும் சில விசேஷ கடமைகள் உண்டு. உதாரணமாக ஜெர்மன் தேசத்தையெடுத்துக்கொள்வோம்.சுமார் 50 வருஷங்களாக அந்த தேசத்தலைவர்கள் தங்கள் தேசத்தில் கல்வி வியாபாரம் கைத்தொழில்களை விருத்திசெய்ய அரும்பாடுபட்டு உலகத்தோர் பிரமிக்கும்படியான உன்னத நிலைமைக்குக் கொண்டுவந்தது அவர்களின்தேசாபிமானமட்டுமல்ல தேசசுதந்திர மிருந்ததே முக்கியகாரணம், நாலுவருஷங்களுக்கு முன்உன்னத நிலைமையிலிருந்தஅதே ஜெர்மனிஇப்போது ரூர்ரூர் (ரூர்என்னும் மாகாணம் எதிரிகைவசமிருக்கிறது) என்று அலறுவானேன்? இந்தியாவில்இந்தியர்கள்முட்டிமுட்டி அழுவதும் ஆபிரிக்காவில்வெள்ளையர்மிட்டலுக்கு இந்தியர்கண்ணீர்விடுவதும்ஏன்?தேசசுதந்திர மிழந்த துரோகுறைதான்.இதனால் ஒரு தேசமோ ஒரு ஜனசமூகமோ அதற்குள்ள சுதந்திரமிருந்தால் மேன்மையும், இழந்தால் தாழ்மையுமேற்படுமென்றும் சுதந்திரம்செல்வம்போல் மாறிமாறி வருமென்றும் பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது.

மேனாட்டிவோ மண்ணும்பொன்னும் தேட இடம்பார்த்து அதைத் தங்கள் வசப்படுத்துவதுதான் மேலான சுதந்திரமாகக் கருதப்படுகிறது. இந்தியாவிலோ சத்தியத்தைக் (மதத்தின் உண்மையை) காப்பதுதான் மேலானசுதந்திரமாக நம்பப்படுகிறது.

நாயக்கர் அரசாக்ஷியில் துவேஷக் கூண்டில் அடைபட்டிருந்த (நாடார்ஜாதி) சிங்கம் அந்த அரசாங்கத்தாராலும் அவர்கள் தூண்டுதலால் இதரர்களாலும் தன் புறக்கணிக்கப்பட்டவர்களாலும் தான் சிங்கம் (க்ஷத்திரியன்) என்பதை மறந்துபோகாமலிருந்ததால் எதிரிகளுக்குப்பணிந்துவிடவில்லை.

கால மாறுபாட்டால் நாயக்கர் அரசிழந்து பாண்டியநாடு ஆங்கிலேயர்வசப்பட்டுவிட்டது. அதனால் நாடார்களை இம்சித்துவந்த சக்தி தானும் இன்னொரு சக்திக்கு அடங்கிவிட்டதால்நாடார்களை இம்சைசெய்துவந்தவர்களின் அதிகாரம்ஒழிந்ததே தவிர நாடார்களின்குறைகள் நீங்கி அவர்கள் மேல் இதர ஜாதியார் கொண்டுள்ள துவேஷம் பூராவும் மாறிவிடவில்லை. இதனால் தான் நாடார் ஜாதி இப்போதும் அடிக்கடி கஷ்டப்படநேரிடுகிறது. ஜாதீய விஷயத்தில் நாடார்களின் குறைகளை நீக்கவில்லையென்று ஆங்கில கவர்ன்மெண்டார் மேல்மட்டும் தாராளமாய்க் குறைசொல்வதோடுநின்றுவிடமுடியவில்லை. ஆங்கில கவர்ன்மெண்டால் தான் நாம் முன்னேற்றமடைய முடியுமென்ற நம்பிக்கையுள்ள நாடார் தலைவர்கள் கவர்ன்மெண்டார் மூலமாகத் தங்கள் குறைகளை நீக்குவதற்கு என்ன பிரயத்தனஞ் செய்தார்களென்று பார்த்தால் ஒன்றுமில்லை என்று தலைகுனிய வேண்டியதுதான். ஆனால் என்னதான் செய்கிறார்களென்று பார்த்தால் சிங்கத்தின்தோலைமூடிக்கொள்ள ஆசைப்பட்டுஅந்தப்படி செய்துவருகிறார்களே தவிர, பழைய சிங்கங்களாக முயற்சிக்காமல் வெறுமே முன்னேற்றமடைந்து விட்டோமென்று பூரிக்கிறார்கள். உண்மை என்னவென்றால் தங்கள்க்ஷத்திரியத்தன்மையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவருவது மிகவும் வருந்தத்தக்கது. தங்கள்'சுதந்திரம் கௌரவம் அத்தனையும் போனாலும் பூமியில் பிறந்ததற்கு உண்டு

# மதிப்புரை.

**மங்கம்மாள் அல்லது மதுரைக்கரசி.**

இம் மகுடம் புனைந்த ஓர் துப்பறியும் இனிய நாவல் கிடைக்கப் பெற்றோம். இது இருபத்தைந்து அத்தியாயங்களுள்ளதாகவும் சுமார் 250பக்கங்கள்கொண்டதாகவும் நல்ல உயர்ந்த 'கடிதத்தில் பதிப்பிக்கப்பட்டு, அழகிய பயின்டோடு கூடியதாயுமிருக்கிறது. இஃது ஸ்ரீமான் எஸ். கூடலிங்கம் அவர்களால் எழுதப் பெற்றது. இதை நாம் முற்றும்வாசித்துப்பார்த்ததில் இதுஒரு புனைக்கதையாயினும், நன்மை பயவாது மக்கட்கு இயல்பாகவுள்ள நல்லறிவு நல்லொழுக்கங்களை சிதைக்கும் இதரநாவல்களைப்போலில்லாமல் படிப்போர்க்குஇனிய தமிழ்மக்களின் உள்ளத்தின் வளம்பெருகி அவருக்கு நல்லறிவு ஆத்மலிக்கத்தக்கநயம் பயக்குமென்பது உண்மை. இப்போது இது இரண்டாம்பதிப்பாகியிருக்கிறது. விலை ரூபாய் 1—8—0 தான்.

விலாசம்:—

S. கூடலிங்கம்
புத்தகசாலை
மதுரை.

• • •

**கதாமாலிகா.**

இஃது ஒரு மாதாந்தர தமிழ்ப் பத்திரிகை இதன் முதல் பிரதி கிடைக்கப் பெற்றோம். இது மாதாமாதம் அழகிய கற்பனைக் கதை ஒன்று 64 பக்கங்களுக்குக் குறையாமலும் வேறுபல அரியவிஷயங்களுடனும்முக்கியவிளம்பரங்களுடன் வெளிவருகிறது. இதில் வஸந்தா அல்லது வீரகேசரியின் விநோதச்செயல்கள் என்ற கதை தொடங்கப்பட்டிருக்கிறது இதில் அடங்கியுள்ள இரண்டு அத்தியாயங்களை வாசித்ததில் வீரகேசரி என்னும் கொள்ளைத்தலைவனின் வீர சூர தீரச் செயல் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இதற்கு ஆசிரியர் ஸ்ரீயான் எஸ். எஸ். அருணகிரிநாதர். இதற்கு வருடச் சந்தா ரூ 2—8—0 தான். விலாசம்:—

ஸ்ரீ காமாக்ஷி விலாச புத்தகசாலை
வேப்பேரி, சென்னை.

---

## ஓர் அறிக்கை.

பினாங்கு, கோலாலம்பூர், சிங்கப்பூர், மலாக்கா, ஈப்போமுதலிய பிரதேசங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள் தங்களுடைய நான்காவது ஆண்டு சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பிவைக்கும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம். ஜலப்பிரதேசங்களுக்கு வி. பி. செலவு இரண்டு மடங்கு அதிகமாவதோடு சரியானகாலத்தில் கிடைக்குமேன்பதும் சந்தேகந்தான். ஆகையால் நமது மித்திராபிமானிகள் தங்கள் சந்தாத் தொகையை உடனே மணியார்டர் செய்யும்படி வேண்டுகிறோம்.

மானேஜர்.

---

உடுத்தி சுகித்திருப்பதற்கு இடையூறில்லாவிட்டால் போதுமென்று எண்ண ஆரம்பித்துவிட்டார்கள். இதைத்தான் மிருகசுபாவ மென்பர் மேலோர். அதுவும் கஷ்டமானால் சல்லாய் மண்ணைப் பிறக்கலாம். அப்படியல்லாது பகுத்தறிவுள்ள மானிட ஜென்மத்தில் உத்தம க்ஷத்திரியஜாதியில் பிறந்திருக்கிறோமென்பதை நாடார்கள் உணரட்டும். உணர்ந்தால் தங்கள் ஜாதி ஏதோ சுதந்திரக் குறையால் தடைபட்டிருப்பது தெரியவரும். அந்தத் தடையென்ன? அதை நிவர்த்திக்கும் மார்க்கம் எது?என்று பார்க்குமுன் ஜனசமூகத்தின் நிலைமையை ஒருவாறு ஆராய்ந்துகொண்டால் மகாஜன சங்கம் செய்யவேண்டிய வேலையைப் பொது ஜனங்கள் ஏகோபித்துத் தீர்மானிக்க ஏதுவாயிருக்கும்.

சுதந்திர ஆவலன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# சமத்துவம்.

—:x:—

காங்கிரஸ் பஜார்.

(முன் தொடர்ச்சி)

நாடார்:—"இந்தியாவின் முற்கால சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் இங்கே இருண்ட இராப்பொழுது ஏற்பட்டதற்கு ஆதிகாரணம் தனிப்பட்டு நிர்ப்பிரியக்கொண்டதேயாகும், எந்தத் தேசத்திலும் இந்தக்காரணம்தான் ஏற்பட்டிருக்கிறது. இந்தியா வென்ற அறைக்குள் ஜோதி எவ்வளவு பெருமையுடன் விளங்குகின்றது. ஓ! அது எனக்குச் சொந்தம், என்னுடையது, எனக்கே உரித்தாகட்டும். இப்படியே கூறிக் கொண்டு கதவுகளையும், ஜன்னல்களையும் மூடிக் கொண்டோம்"

சுவாமி ராமதீர்த்தர்.

நாடார்கள் விஷயத்திலும் அந்த உண்மை சரியாயிருக்கிறது. நாயக்கர் ராசாதி ஏற்பட்டதிலிருந்து நாடார்கள் பொதுஜன வாழ்விலிருந்து விலகி, தங்களுக்கென்று தனியே சகலமும் ஏற்படுத்திக் கொண்டதால் தங்கள் சக்திக்கு பிறர் ஒத்துழைப்பில்லாமலும், சக்தியின் ஒளி பிறருக்குத் தெரியாமலும் போய்விட்டது. அதனால்தான் அவர்கள் நியாயமெல்லாம் விழலுக்கிறைத்த நீர் போலாகிறதென்று பாக்யர்கள் யோசிக்கிறார்கள். உதாரணமாக இராமநாதபுரம் ஜில்லாவில் அருப்புக்கோட்டை என்று ஒரு ஊர் உண்டு அதில் மொத்தம் 30-ஆயிரம் ஜனத்தொகையில் நாடார்கள் 3-ஆயிரம் அந்த ஊரில் சுமார் 20-வருஷத்திற்குள் நாடார்கள் தங்களுக்கென்று இரண்டு லக்ஷம் ரூபாய் செலவு செய்து ஒரு சிவன் கோவிலும்கட்டி இருபது ஆயிரம் ரூபாய் செலவு செய்து ஒரு ஹைஸ்கூல் கட்டி தங்கள் பையன்களுக்குச் சம்பள மில்லாமல் வைத்து உபாத்தியாயருக்கு மாதா மாதம் சம்பளச் செலவுக்காக ரூ ஆயிரமும் மாரியம்மன் கோவில், சிவன்கோவில் உற்சவாதிகளும், நந்தனவனம், தெப்பக்குளம். பேட்டை இன்னும்மற்றுமுள்ள சகல தர்மகாரியங்களும் நடத்துகிறார்கள். பள்ளிக்கூடத்தில் இதர ஜாதிப் பையன்கள் படிக்கவும், மற்ற தர்மஸ்தாபனங்களில் இதரர்கள் சகலமும் அனுபவிக்கவும் இடம் விட்டிருக்கிறார்கள். என்னே நாடார்ஜாதியின் உதாரகுணம் 30 ஆயிரம் ஜனத்தொகைகொண்ட ஒரு ஊரில் செய்யவேண்டிய பொதுக்காரியமெல்லாம் பத்திலொரு பங்கு கொண்ட ஒருஜாதியாரால் செய்யப்படுகிறது. சகல ஜாதியாரும் சேர்ந்து வாழ்ந்தால் நாடார்கள் தனித்துச் செய்கிற செலவில் அந்த ஊருக்கு வேண்டிய பொதுஸ்தாபனம் பூராவும் சரிவர நடத்தலாம். அதற்கு வழியில்லாததாலும், நாடார்கள் பரம்பரையாய்ச் செய்துவந்த உழைக்கதாலும், தங்கள் சம்பத்தில் ஒரு பங்குபோக அதுபோல் ஒன்பது பங்கு பணத்தையும் யாதொரு பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் கொடுக்கிறார்கள். இதனால் நாடார்களின் செல்வம் எவ்வளவு தூரம் நசுக்கிப் பிழியப்படுகிறது பாருங்கள். இப்படி ஒரு ஊரிலுள்ள சகலவகுப்பினர்களும் பொருப்பேற்று, விடாமுயற்சியுடனும் தாராளமாகவும், உலக க்ஷேமத்தையும் தேச நன்மையையும் உத்தேசித்துச் செய்ய வேண்டிய பொதுக்காரியங்களை, இதரவகுப்பினர்கள் பாராமுகமாயிருக்க ஒரு வகுப்பினரான நாடார்கள் நடத்தி, இத்தகைய பொதுக்காரியங்களைச் செய்துகொண்டுபோவதினால் அவர்களுடைய (நாடார்களுடைய) முயற்சி இதர தேசப் பொதுக்காரியங்களில் பிரகாசியாமலிருக்கிறதென்று சொல்ல வேண்டியதிருக்கிறது. ஒவ்வொரு ஊரிலும் இதேமாதிரிதான், விருதுநகர் ஹைஸ்கூலில் சகல ஜாதிப் பையன்களுக்கும் சம்பளமில்லை. இதை எந்த ராஜீய கக்ஷியாரும் ஆழ்ந்து கவனித்துப் பார்த்ததில்லை. தேசியக் கல்விக்கென்று பிச்சை எடுக்கிறார்கள். அதுவும் பூராவும் சரியாய் நடக்கவில்லை. நாடார்கள் நினைத்தால் தங்கள் பள்ளிக்கூடம் அக்கனையும் தேசியக் கல்விச்சாலையாக்க முடியும். நாடார்களுடைய சாதாரண நித்தியவேலைகளைத்தானும் தேச (காங்கிரஸ்) நிர்மாணவேலைக்கு அனுகூலமாயிருப்பதை கவனித்தீர்களா? காலு அணாக் கொடுத்து அங்கத்தினர் ஆகாததால் நாடார்கள் காங்கிரஸில் சேரவில்லை யென்றுசொல்லுபவர்கள். காரணகாரியத்தை அறியாதவர்களே, காலணா நாடார்களுக்கு ஒருபிரமாதமல்ல.

வங்காளத் தலைவர்:—சகோதரரே தாங்கள் சொல்லும் புள்ளிவிபரங்கள் என்னை திடுக்கிடச் செய்துவிட்டது. ஓ: நாடார் பள்ளிக்கூடத்தில் சம்பளமில்லாமல்படித்தவர்களும், உபாத்திமார்களுமான இதர ஜாதியார்கள் நாடார்களுக்கு அனுகூலமாக வேலை செய்கிறார்களா? இவ்வளவு அபாரச் செலவுக்கு நாடார்களுக்குப் பணம் ஏது?

நாடார்:— நாடார் பள்ளிக்கூடங்களில் அவர்கள் ஜாதிய உண்மையைப் போதிக்காத குறையினால். அங்குபடிப்பவர்கள் நாடார்களின் மேல் தாங்கள் கொண்டுள்ள தப்பெண்ணத்தை மாற்ற முடிய வில்லை. அதனால் இந்தியாவின் உப்பைத்தின்று இந்தியாவின் முன்னேற்றத்திற்கே விரோதமாயிருக்கும் லைடன்றைம் கூட்டத்தைப் போல் சிலர் இருப்பது ஆச்சரியமல்ல. இருந்தாலும் பெரும்பாலோர் அனுகூலமாகவே யிருக்கிறார்கள். பிரிட்டிஷ் பீரங்கிக்குப் பயந்து இந்தியர் எப்படி வரிக்கொடுத்து வருகிறார்களோ, அதேபோல சுதந்திரம் ரோஷம் தங்கள் குலதர்மமாகிய பொது வாழ்க்கைக்கு ஈடுபட்டு இதர எந்தஜாதியாரும் செய்யாத விசேஷ செலவுக்கு நாடார் பொது ஜனங்கள் பூராவும் தங்கள் தொழிலுக்குத் தக்கபடி வரி (மகமை) கொடுப்பது தங்கள் கடமையென்று நினைத்துக் கொடுக்கிறார்கள். நாடாரல்லாதார் உள்பட பொது ஜனங்களுக்கு நன்மையான காரியம் செய்தும் நாடார்களின் ஆசார ஒழுக்கத்திற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் பாண்டிய நாட்டில் ஆலயச் சுதந்திரம் இருக்கும்போது தங்களுக்கு இல்லையே யென்று ஒவ்வொரு நாடார் இரத்தமும் கொதிப்படைகிறது தங்கள் குறைகளை நீக்கி முன்போல் பொதுவாழ்வில் கலந்துகொள்ளவிரும்புகிறார்கள்.

மகாராஷ்ட்ர தலைவர்:—நாடார்கள் இப்போது ஆசார ஒழுக்கத்திலும் மேலானவர்கள்தானா?

நாடார்—சந்தேக மென்ன, அரசபரம்பரையின ரென்பதை மறந்து விட்டீர்களோ?

மகாராஷ்ட்ர தலைவர்—சகோதரரே! கோபம் வேண்டாம் கஷ்டப் படும்போது ஆசாரங்கள் கைவிடப்படுவது மனித சுபாவம். அப்படி ஏதாவது இருக்குமென்று எண்ணிக் கேட்டேனே தவிர வேறொன்று மில்லை.

நாடார்—சகோதரரே! கோபமில்லை. தங்களைப்போன்ற பெரியோர் முன்னிலையில் நான் எம்மாத்திரம். ஜாதியில் உயர்ந்தவர்களாகிய பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களில், மாறுபாட்டைத்தவிர ஆசார ஒழுக்கங்களில் சகல வழிகளிலும் அவர்களைப் பின்பற்றியே நடக்கிறார்கள். இதுயாவரும் அறிந்த விஷயம். இனி நாடார்களின் விஷயங்களை நிறுத்திக் கொண்டு நாடார்களுக்கும் தற்கால பொது விஷயத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தத்தைச் சொல்லுகிறேன்.

பஞ்சாப் தலைவர்...நாடார்கள் தங்கள் குறையை நீக்க என்ன செய்கிறார்கள் மற்றவர்கள் என்ன செய்கிறார்களென்று சொல்லவில்லையே.

நாடார்—மற்ற விஷயங்களை யெல்லாம் சொல்லி விட்டால்தான் நாடார்கள் விஷயம் நன்றாய் புலப்படும். ஆதலால் அதைக்கடைசியில் சொல்லுகிறேன். நான், நாடார்கள் இந்தியர்கள் உண்மைச் சரித்திரங்களை வாசித்தது முதல் ஒவ்வொருவிஷயத்திலும் இந்தியஜாதிக்கும் நாடார் ஜாதிக்கும் ஒற்றுமையிருப்பதைக் கண்டேன். ஆனதால் இந்தியத்தலைவர்களின் வார்த்தைகளுக்கு நாடார்களின் சம்பந்தம் எந்த மட்டிலிருக்கிற தென்று காட்டுகிறேன். [என்று சொல்லி ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தார்.) இங்கிலாந்தில் சமீபத்தில் கலைந்த பார்லிமெண்ட் எலக்ஷன் நடைபெறும் போது லோகமான்ய பாலகங்காதர திலகர் பிரிட்டிஷ் ஓட்டர்களுக்குக் கொடுத்தது. அதில் இந்தியாவின் பாத்தியதையை நன்றாய் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு இந்தியரும் நூறுதரம் அதைப்படித்து மனதில் வைத்துக் கொண்டு நாடார்களின் விஷயத்தை கவனிக்கவேண்டும். அதுபின்வருமாறு.

இன்னும்வரும்.

சமத்துவப்பிரியன்.

---

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

நாடார் மகாஜனங்களுக்கோர் அறிக்கை.

ஐயன்மீர்!

1920-ம் ஞு நவம்பர் மாதத்தில் நடந்த சட்டசபை எலெக்ஷன் எல்லோருக்கும் ஞாபகமிருக்கலாம். அந்தச் சட்டசபை இப்பொழுது கலைக்கப்படப் போகிறது. புதிதாக கூட்டப்படும் சட்டசபைக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்க நாளது 1923ளு நவம்பர் மாதத்தில் எலெக்ஷன் நடக்கும்.

திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் ஆயிரக்கணக்கான நாடார் ஓட்டர்கள் இருந்தும் ஒரு நாடாராவது சென்ற எலெக்ஷனில் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படவில்லை. நாம் முன் ஜாக்கிரதையாயிருந்து தகுந்த முஸ்திப்புடன் வேலை செய்யாததுதான் இதற்குக்காரணம்

இந்தத் தடவையேனும் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். முதலாவது நாடார்களில் யார் யார்ஓட்டுக் கொடுக்க சுதந்திர முடையவர்களென்று தெரிந்து கொண்டு அவர்களுடைய பெயர்கள் சர்க்காரால் தயார் செய்யும் ஓட்டர் ஜாபிதாவில் வந்திருக்கின்றனவா வென்று கவனிக்கவேண்டும். அந்தப் பெயர்கள் முதலில் பிரசுரமாகும் ஓட்டர் ஜாபிதாவில் வராமல் போனாலும் தப்பாய் பிரசுரமானாலும் அதை உடனே டிப்டி கலெக்டருக்கு தெரிவித்து அந்தப் பெயர்களை மேற்சொல்லிய ஜாபிதாவில் புதிதாகவோ திருத்தியோ சேர்க்கச் செய்யவேண்டும்

இது பூர்த்தியான பிறகு நமது ஜாதிய முன்னேற்றத்திற்கு வேண்டிய வழிகளைத்தேடி அதற்கான முயற்சியைச் செய்ய யோக்கியதையுள்ளவர்களுக்கு ஓட்டு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். ஓட்டர்கள் தங்களுடைய கடமைகளை இவ்விதமாகத் தெரிந்து கொண்ட பிறகு அவர்கள் தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட போலிங்ஸ்டேஷன்களுக்குத் தவறாமல் சென்று குறித்த பதற்கு ஓட்டுச் செய்யவேண்டும். இவ்வளவும் சரிவர நடந்து விடுமாயின் நாம் எடுத்துக் கொண்டிருக்கும் காரியம் சித்திபெறும்.

யார் யார் எந்தெந்த சபைக்கு ஓட்டுக் கொடுக்க சுதந்திரமுள்ளவர்களென்று அடியிற் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.—

(a) சென்னை மாகாண சட்டசபை.

(1) வருஷத்தில் ரூ 10-க்குக் குறையாத கிஸ்தி செலுத்தும் பட்டாதார்களும், இனாம்தார்களும்.

(2) வருஷத்தில் ரூ 10-க்குக் குறையாத கிஸ்தியுள்ள நிலங்களை ரயத்துவாரி பட்டாதார்களிடமிருந்தாவது, இனாம்தார்களிடமிருந்தாவது குத்தகைக்கு வாங்கிப் பயிர்செய்பவர்கள்.

(3) சென்ற வருஷத்தில் முனிசிபாலிட்டியில் ரூ 3-க்குக் குறையாத ஆஸ்திவரி, தொழில் வரி செலுத்தியவர்கள்.

(4) சென்ற வருஷத்தில் ஏதேனும் வருமானவரி செலுத்தியவர்கள்.

(b) இந்தியா அஸம்பிளி.

(1) வருஷத்தில் ரூ 50-க்குக் குறையாத கிஸ்தி செலுத்தும் பட்டாதார்களும். இனாம்தார்களும்.

(2) வருஷத்தில் ரூ 50-க்குக் குறையாத கிஸ்தியுள்ள நிலங்களை ரயத்துவாரி பட்டாதார்களிடமிருந்தாவது, இனாம்தார்களிடமிருந்தாவது குத்தகைக்கு பயிர்செய்பவர்கள்.

(3) சென்ற வருஷத்தில் முனிசிபாலிட்டியில் ரூ 20-க்குக் குறையாத ஆஸ்திவரி தொழில்வரி செலுத்தியவர்கள்.

(4) சென்ற வருஷத்தில் ஏதேனும் வருமானவரி செலுத்தியவர்கள்.

(c) இந்தியா ஸ்டேட்ஸ் கவுன்ஸில்.

(1) வருஷத்திற்கு ரூ [illegible]000-க்குக் குறையாத வருப்படியுள்ள பூஸ்திதியையுடைய பூபதிகள்.

(2) தன்னீர்த் தீர்வையைச் சேர்த்து வருஷத்தில் ரூ 1500-க்குக் குறையாத கிஸ்தி செலுத்தும் பட்டாதார்கள்.

(3) சென்ற வருஷத்தில் ரூ 20000-க்குக் குறையாத தொகைக்கு வருமானவரி செலுத்தியவர்கள்.

குறிப்பு:—ஓட்டர்கள் 21-வயதிற்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும். சென்னை மாகாண சபைக்கும், இந்தியா அஸம்பிளிக்கும் மெம்பர்களைத் தெரிந்தெடுக்க புருஷர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ அவ்வளவு சுதந்திரம் ஸ்திரீகளுக்கும் உண்டு. ஜாயின்ட் பட்டாதார்கள் தங்களுக்குப் பிரதிநிதியாக ஓட்டுக் கொடுக்க தங்களிலொருவரைத் தெரிந்தெடுத்து அவர் பெயரை ஓட்டர் ஜாப்தாவில் பதிவு செய்விக்கலாம்.

தங்கள் தாழ்மையுள்ள,

மா. வே. பழனிச்சாமி நாடார்.

வா. அ. புன்னையப்ப நாடார்,

காரியதரிசிகள்.

---

## விருதுநகர், ராவ்பகதூர் T. இரத்தினசாமி நாடார் மெமோரியல் லைபிரேரி & ரீடிங் ரூமின் 5-வது வருஷ ரிப்போர்டு.

1. ஹாலில் வந்து பேப்பர் புஸ்தகம் படித்தவர்களின் எண்ணம். 21042.

2. வெளியில் புஸ்தகம் பேப்பர் எடுத்துக்கொண்டுபோய் படித்தவர்கள். 4204

3. ஸ்டாக் தமிழ் புஸ்தகங்கள் 600.
,, இங்கிலீஷ் புஸ்தகங்கள் 313

4. மெம்பர்கள். 201.

5. லைப்ரரி அண்டு ரீடிங் ரூமுக்கு வரும் சமாச்சாரப் பத்திரிகைகள்.—

(தமிழ்) சுதேசமித்திரன், திராவிடன் நவசக்தி. தமிழ்நாடு, நாடார்குல மித்திரன், க்ஷத்திரிய மித்திரன், பாண்டிய குல தீபம். ஆனந்த போதினி, இராமநாதபுரம் ஜில்லாக்கெஜட் (இங்கிலீஷ்) இந்து, சுயராஜ்யா, மாடர்ன் ரிவ்யூ. ஆக மொத்தம் 12.

1. லைப்ரரிக்கு வந்து படிக்கிறவர்களின் எண்ண மிகவும் திருப்தி யென்றே சொல்ல வேண்டும்.

2. வெளியில் புஸ்தகம் எடுத்துப்போய்ப் படித்தவர்களில் அநேகர் மாணவர்களாயிருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும், ஸ்டாக் புஸ்தகங்கள் போதுமானதல்ல என்ற பொதுஜன அபிப்பிராயமிருப்பதால், கனவான்கள் மெம்பர்களாகச் சேர்ந்தும் பொருளுதவி செய்தும் ஆதரிப்பார்களென்று நம்புகின்றோம்.

3. ஸ்டாக் புஸ்தகங்கள் சென்ற வருஷத்தைக் காட்டிலும் கூடுதலாகவேயிருக்கிறது. மேலும், பண்டிலிருந்து புதிதாக புஸ்தகங்கள் வாங்குவதற்கு அவசிய மேற்பட்டு அதற்காக ரூ 50 சாங்ஷன் ஆகியிருக்கிறது.

4. மெம்பர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது சந்தோஷிக்கத் தக்கது.

கனவான்கள் இதுவரை பைசாப் பண்டுக்குக் கொடுத்து வந்ததுபோல் இன்னும் விசேஷமாய் கொடுத்துதவி வரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

லைப்ரரியின் அபிவிருத்திக்காக பொருளுதவி செய்தவர்களுக்கும், ஒத்தாசை செய்தவர்களுக்கும் எங்களது மனமார்ந்த வந்தனம்.

ஈஸ்வரானுக்கிரகத்தாலும், கனவான்களின் உதவியாலும், நமது லைப்ரரி நம் ஜனசமூக முன்னேற்றத்திற்காக நின்று நிலவுமென நம்புகிறோம்.

சுபம்! சுபம்!! சுபம்!!

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# அன்பே தீர்ப்பு.

(காலஞ்சென்ற ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது)

இனிமேல் யாரேனும் ஒரு மஹான் வந்து மனுஷ்யனைச் சாகாமல் நூறாண்டேனும் பயமில்லாது வாழக்கூடிய மருந்தும் உபாயமும் உலகத்துக்குக் காண்பிக்கலாம். மனுஷ்யன் பாவத்தைவிட்டால் அமரத்தன்மையடையலாம். பாவத்திற்கு சம்பளம் மரணம் என்று கிறிஸ்தவவேதம் சொல்லுகிறது. பாவத்தை நீக்கி மனிதர் மரணத்தை வெல்லக்கூடிய காலம் வரலாம். ஆனால் இப்போதுள்ள நிலைமையில் மனிதன் இந்த உலகத்தில் வாழ்வது சதமில்லை. "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பர் என்றெண்ணவோ திடமில்லையே" என்று தாயுமானவரும் சொன்னார்.

எங்கிருந்தோ வந்து இவ்வுலகத்தில் சில நாள் வாழ்கிறோம். செத்த பிறகு நம்முடைய கதி என்னாகுமோ கடவுளுக்குத்தான் தெரியும். மூன்றே முக்கால் நாழிகை உயிர் வாழ்வதில் சந்தோஷத்துடன் இருந்துவிட்டுப் போகக்கூடாதா? அட்டா! இந்த பூமியில் மனித உயிருக்கு எத்தனை கஷ்டம், எத்தனை பயம், எத்தனை இடையூறு, எத்தனைகொலை, எத்தனை துரோகம், எத்தனை கொடுமை, எத்தனை அநியாயம்! ஐயோ பாவம்.

அடா, மனிதர்களே, எத்தனையோ சாஸ்திரங்களுக்கும், ஆக்கினைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் நாம் மனதார உட்பட்டிருக்க இல்லையா? ஒரு புதுக்கட்டுப்பாடுசெய்து கொள்வோமே! அந்தக்கட்டுப்பாடு யாதெனில்:—"ஒருவனுக்கொருவன் பயப்படுவதும் இல்லை."

மானிடரே, இந்த விரதம் எடுத்துக்கொள்ளுங்கள். இதுதான் பிழைக்கும் வழி. தெருவில் நடக்கும்போதே முன்பின் தெரியாத மனிதர்கூட ஒருவர்க்கொருவர் கோபம் அல்லது அவமதிப்பு அல்லது பயத்தோடு பார்த்துக்கொள்ளுகிறார்கள். மனிதனுக்கு மனிதன் இயற்கையில் விரோதம் என்ற நிலைமையில் உங்களுடைய மூடத்தனமான மனுஷ்ய நாகரிகம் வந்து சேர்ந்திருக்கிறது. இதை மாற்றி அன்பை மூலாதாரமாக்கவேண்டும்.

முதலாவது. சிலருக்குச் சோறு மிதமிஞ்சியிருக்கப் பலர் தின்னச் சோறில்லாமல் மடியும் கொடுமையைத் தீர்த்துவிட வேண்டும். இது இலக்கம் ஒன்று பூமியின் மீதுள்ள நன்செய், புன்செய், தோப்புதுறவு, சுரங்கம், நதி, அருவி, குப்பை, செத்தை, தரை—கடவுளுடைய சொத்தில் வேலிக்கட்டக்கூடிய பாகங்களையெல்லாம் சிலர் தங்களுக்குச் சொந்தமென்று வேலிக்கட்டிக்கொண்டனர். பலருக்கு ஆகாசமே உடைமை: வாயு ஆஹாரம்! இதற்கு மருந்தென்னவென்றால், எல்லோரும் சமானம். அண்ணன் தம்பிபோல என்ற புத்தியுண்டாய் ஏழைகள் வயிறு பசிக்காமல் செல்வர் காப்பாற்றவேண்டும். அது முடியாவிட்டால் ஐரோப்பாவில் அபேதவாத (ஸோஷலிஸ்ட்) கக்ஷியார் சொல்வது போல நிலத்தை ஸகலருக்கும் பொது வென்று ராஜ்யவிதி ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.

மனிதர் அத்தனை பேருக்கும் போதுமான ஆஹாரம் பூமிதேவி கொடுக்கும். பூமிதேவியின் பயனை கேமே கையாளத் தெரியாமல் பொறுமையாலும், அறியாமையாலும் தாறுமாறாக விழுந்து திரிந்து சோறு தேடும் கோலத்தில் சோறு தேடாமல் ஒருவருக்கொருவர் கொல்லை வழித்தடி, [illegible] மனிதர் பரிதாபகரமாக [illegible] கட்டுப்பட்ட வாழ்வு [illegible] கொளுத்துப்போ [illegible] தன் வயிற்றுக்கும் [illegible] நினைப்பவர் பரமமூடர். பலர் [illegible] பங்கவரை சிலர் செளக்கியமடைதல் இந்த உலகத்தில் ஸாத்தியமில்லை. பொருளாளி நல்ல உடுப்புகள் அணிந்துகொண்டு தெருவில் உலாவுவதையும், அவனுடைய கன்னத்தில் சதை உப்பியிருப்பதையும், அவனுடைய ஏவலாட்களின் தொகையையும், சிறுமையையும் மேற்படி பொருளாளி பிறரை அவமரியாதை செய்வதையும் கண்டு மயங்கிப்போய் அவன் பரமார்த்த நிலையில் இருப்பதாக ஏழை நினைக்கின்றான். அது தவறு. அவன் மனதில் ஒழிந்து கிடந்து அவனுயிருக்கும் நரகவாதனை செய்யும் துயரங்களை ஏழை அறியமாட்டான். ஒரு வகுப்பின் மனம் மற்றொரு வகுப்புக்குத் தெரியாமலும் ஒருவனுடைய உள்ளம் மற்றொருவனுக்குத் தெரிய இடமில்லாமலும் மனுஷ்ய நாகரீகம் அவ்வளவு மூடத்தனமான நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

## வறுமையின் பயன்.

ஏழையின் அழுக்குத் துணியையும் அழுக்குடம்பையும், சிரைக்காத முகத்தையும் பார்த்துப் பொருளாளியின் குழந்தைகள், மேற்படி ஏழை தமது மனுஷ்ய பதவிக்குத் தாழ்ந்த பன்றி, நாய், மாடு வகுப்பைச் சேர்ந்தவனென்று நினைக்கிறார்கள். ஐரோப்பாவில் ஏழைக்கும் பொருளாளிக்கும் விரோதம் முற்றிப் போய், உள்நாட்டுச் சண்டைகள் நேரிடும் அப்படி நேரிடாதபடி தடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஜனங்களை உள்நாட்டில் ஒன்றுசேர்க்கும் பொருட்டாக வெளிநாடுகளின்மீது சில ராஜாக்கள் போர் தொடங்கக் கண்டங்களில் போர் பரவியும், பூமண்டலம் தூள் தூளாகிறது. கிழக்கு தேசங்களிலும், யுத்தமில்லாமல் ஸமாதானத்துடன் இருக்கும் [illegible]களிலும் திருஷ்டாந்தமாக நமது தமிழ்நாட்டுப் பறையர்கூடக் கண்விழித்துத் தாங்கள் மனிதர்என்பதைத்தெரிந்துகொண்டு மற்ற ஜாதியாருக்குத் தாங்கள் சமானமென்று சபைகூடித் தீர்மானம் செய்கிறார்கள். கிழக்கு தேசங்களில் ஸமாதான எல்லை நிலைகூட ஏழைகளுக்குக் கண் திறந்து பொருளாளிகளை எதிர்க்கத் தொடங்கி யிருக்கிறார்கள்.

சுருக்கக் கூறுமிடத்தே, சோற்றுக்காக மனிதர் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் அநியாயம் நாய்களும் பன்றிகளும் தமது ஜாதிக்குள்ளே செய்யும் வழக்கமில்லை யென்பது லோகப்பிரசித்தமான விஷயம். ஆங்கில பாஷையில் பைரன் என்ற மகாகவி ஒரு சமயத்தில் மனிதரை நாய்களே என்று கூவினார். பிறகு உண்மையில் மனிதரைக் காட்டிலும் நாய்ஜாதி மேம்பட்டதாகையால் மனிதரை நாய்களே யென்றுசொல்லியதிலிருந்து நாய்ஜாதிக்கு அவமரியாதை செய்வதாக ஏற்படுமாதலால் அதை மாற்றி மறுபடி "ஏ, மனிதரே!" என்று கூவி விட்டார்.

## தீர்ப்பு.

அன்புதான் இதற்கெல்லாம் தீர்ப்பு எல்லா மனிதருக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும், குழந்தைக்கும், 'வெள்ளைக்கும், மஞ்சளுக்கும் செம்புக்கும், கருநிறத்து நீக்ரோவருக்கும் சகலருக்கும் பரமாத்மா' பரமபுருஷன் ஆகிய நாராயணனே, அந்தர் யாமியாக நின்று வெளித் தொழில்களை நிகழ்த்துகிறான். ஆதலால்: மானுடனை—ஸஹோதர உணர்ச்சியே தீர்ப்பு. ஸஹோதர உணர்ச்சியைப்பற்றிக் கவிதைகள் பாடுவதும் நீதி நூல்களில் புகழ்வதும் வர்த்தமானப் பத்திரிகைகளில் கர்ஜனை செய்வதும் இவ்வுலகத்தில்வெகு ஸாதாரணமாக இருக்கிறது. நடையில் எந்தக் கண்டத்திலும், எந்த மூலையிலும் அந்த உணர்ச்சி காணப்படவில்லை, அது நடந்துவரவேண்டும். கண் இல்லாதவன் வான சாஸ்திரம் படிக்க முடியாது. இன்பமோ அன்புலகத்தைச் சேர்ந்த பதார்த்தம். ஆதலால் அன்பில்லாவிடின் இன்பமில்லை. இன்பத்தைத் தேடித் தேடி எங்கும் எப்பொழுதும் எதனிலும் காணாமல் வருந்துகிற மானிடரே! கேளுங்கள்.

அன்புண்டானால் இன்பமுண்டென்று புத்த பகவான் கண்டுபிடித்துச் சொன்னார். அந்த புத்தியின் மஹிமையை நேரே மனிதர் தெரிந்துகொள்ளாமல் அவர் காட்டிய பயனை அடையாமலே இருந்துவருகிறார்கள். அன்புகொள்கையில் இருந்தால் போதாது. செய்கையில் இருக்கவேண்டும். உன்னிடம் ஒருகோடி ரூபாய் இருந்தால், அந்த ஒரு கோடி ரூபாயையும் தேச நன்மைக்காகக் கொடுத்துவிட்டு நீ ஏழையாகிவிடத் துணிவாயானால் நீ உன் தேசத்தின்மீது அன்புடையவனாகக் கருதப்படுவாய். உன்னுடைய குழந்தையின் உயிரைக் காக்கும் பொருட்டாகப் புலியின் வாயில் நீ போய் முதலாவது கையிடத் துணிவாயானால், நீ குழந்தையிடம் அன்புடையவனாகக் கருதப்படுவாய். பறையனுக்கு ஸ்நானம் செய்வித்து பக்கத்தில் வைத்துக்கொண்டு சாப்பிட்டால், நீ மனுஷ்ய ஜாதியினிடம் அன்புடையவனாக முழங்குவாய்.

எல்லா ஜந்துக்களிடத்திலும் ஆரம்பப் பழக்கத்துக்கு எல்லா மனித உயிர்களிடத்திலும் தெய்வபக்தி காண்பித்தல் உலகத்தின் துயரங்கள் தீர. நியாயமான ஜன வகுப்பு ஆரம்பமாக ஹேது வுண்டாகும்.

சு—ன்.

## சேர்மாதேவி தாலுகா போர்டும், நாடார்களும்.

(நமது நிருபரிடமிருந்து)

திருநெல்வேலி ஜில்லாவின் தென் கடைக்கோடியில் நான்குனேரித்தாலுகாவும் அம்பாசமுத்திரம் தாலுகாவும் நம்மவர்கள் நிறைவாகவுள்ள தாலுகாக்கள். மேற்படி இருதாலுகாக்களும் உள்ளிட்ட தாலுகா போர்டு சேர்மாதேவி தாலுகா போர்டு என்று அழைக்கப்பட்டுவருகிறது. மேற்படி சேர்மாதேவி தாலுகா போர்டில் நம்மவர்கள் ஒருவரேனும் நாளது வரையும் மெம்பர்ஸ்தானம் வகித்து வரவில்லை. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கலைவதுபோல விருப்பம் செய்கைக்கொப்பாக விருப்பதை நினைக்க மனம் வருந்துகின்றது. சென்ற 1922ம் ஞூ ஜூன் மீ 23, 24தேதிகளில் வெங்காடம்பட்டியில் நடைபெற்ற 'திருநெல்வேலி ஜில்லா நாடார் மகாநாட்டிலும்' சென்ற ஏப்ரல் மீ களக்காடு போஸ்ட் சிதம்பராபுரத்தில் கூடிய 'நான்குனேரி தாலுகா நாடார் மகாநாட்டிலும்' சேர்மாதேவி தாலுகா போர்ட்டில் நாடார்பிரதிநிதிகள் மெம்பர ஸ்தானம் வகிக்க நியமனம்செய்யவேண்டுமாய் ஜில்லா போர்ட் பிரஸிடெண்டவர்களை கேட்டுக்கொண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதை நேயர்கள் அறிவார்கள்.

சேர்மாதேவி தாலுகா போர்ட்டை உள்ளிட்ட நான்குநேரி அம்பாசமுத்திரம் தாலுகாக்களில் நம்மவர்கள் ஏராளமான பேர் இருந்தும் விசேஷமாக நான்குநேரித் தாலுகாவில் நான்குநேரி, களக்காடு விஜயநாராயணம், ராதாபுரம் வள்ளியூர் பழவூர் திசையன்விளை முதலிய 7 பிர்க்காவில் ஒவ்வொரு பிர்க்காவிலும் நம்மவர்களே பெரும்பான்மையோராகவிருந்தும் நம்முடைய சக்தியை வெளிக்காட்டாமல் இராஜீயவிஷயங்களில் தலையிடாதிருப்பது பரிதாபகரமானவிஷயமாகும். இராதாபுரம் பிர்க்காவுக்காக சேர்மாதேவி தாலுகா போர்ட்டில் மெம்பராகவிருக்கும் பணகுடிவாசியான R. அப்ஜிமியா சாஹிப் என்பவர் நம்மவர்களுக்கு கொடுத்துவரும் பல உபத்திரவங்களை கேட்க பரிதாபம். சங்கங்கள் தோன்றுதபடி செய்யும் செய்கையையும் நம்மவர்கள் தனக்குள் அடிமையாயிருக்கவேண்டும் என்ற மந்தபுத்தியொடு செய்யும் செய்கையையும் மகா கவலையை உண்டு பண்ணுகிறது. மேற்படி இராதாபுரம்பிர்க்காவில் நம்மவர்களின் செல்வாக்கை என் நிலை நிறுத்தக்கூடாது? நாம் ஒருவரை மேற்படி பிர்க்காவில் அபேக்ஷகராக நிறுத்திநம்முடையவர்க் குரிமைகளைக் கொடுத்து என்ஜெயபேரிகை கொட்டக்கூடாது. இதே வண்ணமாகவேமேலே காட்டிய 7பிர்க்காவிலும் அம்பாசமுத்திரம் தாலுகாவில் உள்ள நம்மவர்களும் சேர்மாதேவி தாலுகா போர்ட்டில் உள்ள பெரும் பான்மையான ஸ்தானங்களை கைப்பற்ற முன்வரவேண்டும்.

---

நமது மித்திரன்

## விசேஷப் போஷகப்பிரபு.

இரங்கூன், பிரபல வர்த்தகரும், இட்டமொழியூர் ஹைஸ்கூல் ஸ்தாபகரும், பர்மா, சட்டநிரூபணசபை அங்கத்தினரும், லக்ஷாதிபதியுமான ஸ்ரீமான் A. V. ஜோசப் நாடார் அவர்கள்.

## போஷகப் பிரபுக்கள்.

மதுரை ஜில்லா, பொட்டிப்புரம் ஸ்ரீமான் அ. இருளப்ப நாடார்.
உசிலம்பட்டி, ஸ்ரீமான் முதலாளி ப. வீ. ஆதிமுத்துமாலை நாடார்.
மதுரை, ஸ்ரீமான் G. ஜோசப் நாடார் B. A. B. L.
சென்னை, நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.
சென்னை, ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார்.
கொழும்பு, ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.

திருநெல்வேலி ஜில்லாவில்.

சுவிசேஷபுரம். ராவ்சாகிப் டாக்டர் ஸ்ரீமான் J. S. லாமேக் நாடார்.
ஆறுமுகநேரி, ஸ்ரீமான் சு. சி. பொன்னுச்சாமி நாடார்.
இட்டமொழி, ஸ்ரீமான் A. யேசுவடியான் நாடார்.
மணக்காடு, ஸ்ரீமான் ரா. பொன்னையா நாடார்.
நாதன்கிணறு, ஸ்ரீமான் S. தங்கச்சாமி நாடார்.
கீழமங்கலூர், ஸ்ரீமான் த. ரா. ஜெயமணி நாடார்.
வைத்தங்கரைவிளை, ஸ்ரீமான் ரா. உலகநாத நாடார்.
கிழவனேரி, ஸ்ரீமான் க. ம. அந்தோணிமுத்து நாடார்.
நான்குனேரித் தாலுகா புதூர், ஸ்ரீமான் ரா. பாக்கியநாத நாடார்.
ஆறுமுகநேரி. ஸ்ரீமான் ஆ. பொ. தங்கராஜ் நாடார்.
பொம்மடிக்கோட்டை, மெஸ்ஸர்ஸ் ச. தங்கப்பாண்டி நாடார் அன் பிரதர்ஸ்.
நடுவக்குறிச்சி, ஸ்ரீமான் ந. தி. வெள்ளையா நாடார்.
மணக்காடு, ஸ்ரீமான் ஆ. சாமிநாத நாடார்
இட்டமொழி, மெஸ்ஸர்ஸ் N. சாலோமோன் நாடார் அன்பிரதர்ஸ்.
சாத்தான்குளம், ஸ்ரீமான் தே. பே. மரியராயப்ப நாடார்.
வெள்ளாளன்விளை, ஸ்ரீமான் யோ. யோசேப்பு நாடார்.
மானுடதண்டுப்பத்து, ஸ்ரீமான் கு. ந. நவமணி நாடார்.
இராஜாவின்கோவில், ஸ்ரீமான் செ. சுடலைமுத்து நாடார்.
திருநெல்வேலி, ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடார்.
மானுடதண்டுப்பத்து, ஸ்ரீமான் சோ. செல்லத்துரை நாடார்.
திருப்பாப்பு நாடார்விளை, ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார்.
சிறுநாடன் குடியிருப்பு, ஸ்ரீமான் வே. வே. சுடலைமாட நாடார்.
பெரியகண்டம்வடலி, ஸ்ரீமான் நா. ஆறுமுகநயினார் நாடார்.
சிறுநாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார்.
சிறுநாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார்.
உடையார்குளம், ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார்.

இராமநாதபுரம் ஜில்லாவில்.

வையூர், ஸ்ரீமான் வை. மு. முத்துக்குமார் நாடார் அன் பிரதர்ஸ்.
இலுப்பையூர், ஸ்ரீமான் பு. கு அ. கணபதி நாடார் அன் பிரதர்ஸ்
புத்தாதிபுரம், ஸ்ரீமான் கு. பி. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. ப. சின்னக்காளை நாடார் அன் பிரதர்ஸ்.
முதுகுளத்தூர், ஸ்ரீமான் மா. கருப்பையா நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் மா. க. ராமசுவாமி நாடார்.
மேட்டுப்பட்டி, ஸ்ரீமான் பெ. பிச்சார் நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் த. வ சீ. கிருஷ்ண நாடார் அன் பிரதர்ஸ்.
கீழப்பெருங்கரை, ஸ்ரீமான் பெ. ச. மாடசாமி நாடார் அன் பிரதர்ஸ்.
செட்டியபட்டி, ஸ்ரீமான் செ. அ. சந்திவீர நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் வே. பொன்னையா நாடார்.
பழைபனூர், ஸ்ரீமான் செ. மு. சிவன் நாடார் அன்பிரதர்ஸ்.
எலிங்காயக்கன்பட்டி, ஸ்ரீமான் கி. ஆ. காமாக்ஷி நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் மா. க. மதலைக்கருப்ப நாடார்.
வளநாடு, ஸ்ரீமான் சி. சாமிய்யா நாடார்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. சி. ப. முத்தையா நாடார்.
வடபட்டி. ஸ்ரீமான் அ. க. வேலாயுத நாடார்.
சிவகாசி, ஸ்ரீமான் M. தருமராஜ் நாடார் B. A. B. L.
விருதுபட்டி, ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.
அருப்புக்கோட்டை, முதலாளி ஸ்ரீமான் மு. மு. முத்துக்குமாரசாமி நாடார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection